



# The Trumpet of the Seventh Angel
# ஏழாம் தூதனின் எக்காளம்

1879 - 1916 ரீ–பிரிண்ட்ஸ் தமிழாக்கம்

மலர் – 8, இதழ் – 2, மார்ச் – ஏப்ரல் 2022

**R5267**

## "THESE THINGS WERE TYPES"
## "இவைகள் நமக்கு திருஷ்டாந்தங்கள்"

''அவர்கள் இச்சித்தது போல நாமும் பொல்லாங்கானவைகளை இச்சியாதபடிக்கு, இவைகள் நமக்கு திருஷ்டாந்தங்களாக இருக்கிறது.... இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்கு சம்பவித்தது. உலகத்தின் முடிவு காலத்தில் உள்ள நமக்கு எச்சரிப்புண்டாகும்படி எழுதப்பட்டிருக்கிறது. இப்படியிருக்க, தன்னை நிற்கிறவன் என்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன். '' – 1 கொரிந்தியர் 10: 6–12.

பரிசுத்த பவுலின் வார்த்தைகள் இந்த பத்திரிகையின் வாசகர்களுக்கு மாபெரும் கனத்தை (Weight) கொடுக்கிறது. மேலே சொல்லப்பட்ட வசனம் நமது பொதுவான மொழி பெயர்ப்பில் மிகவும் பலமுள்ளதாகவும், மிகவும் ஆற்றல் வாய்ந்ததாகவும் இருக்கிறது. ஆனால் அதன் ஆற்றல் திருஷ்டாந்தம் என்ற வார்த்தை கிரேக்க மொழியில் பலமடங்கு பெருகியிருப்பதை நாம் கவனிக்கிறோம். ஏனெனில் திருஷ்டாந்தம் என்பது உண்மைப் பொருளின் மிகவும் சரியான மாதிரியாக இருக்கிறது. அது விரிவான அளவில் இருக்கிறது.

யுகங்களின் முடிவு அல்லது அறுவடையைப் பற்றி குறிப்பிடுவதை நாம் கவனிக்கும் போது இந்த கூற்றின் ஆற்றல் இன்னும் தீவிரமடைகிறது. அப்போஸ்தலர் யூத யுக அறுவடையில் வாழ்ந்தார். நாம் அதன் உண்மைப் பொருளாகிய சுவிசேஷ யுக அறுவடையில் வாழ்கிறோம் என்று நம்புகிறோம். இந்த சுவிசேஷ யுகத்தின் அறுவடை அல்லது முடிவாகிய நமது நாட்களில் கிறிஸ்தவ தேசங்களின் மேல் சோதனையும் அழுத்தமும் இருப்பது போல, பரிசுத்த பவுலின் நாட்களில் யூத தேசத்தின் மேல் சோதனையும் அழுத்தமும் இருந்தது போல, இந்த அறுவடைகளைப் பொருத்தவரை ஒரு விசேஷித்த சோதனையும் அழுத்தமும் அப்போஸ்தலர் வசனத்தின் கிரேக்க வார்த்தை குறிப்பிடுகிறது.

சொல்லர்த்தமாக, பரிசுத்த பவுல் கூறினதாவது: "உலகத்தின் முடிவு காலத்தில் உள்ள நமக்கு எச்சரிப்பு உண்டாகும்படி எழுதப்பட்டிருக்கிறது." வேறு ஒரு இடத்தில் இதே அப்போஸ்தலர் நமக்கு இந்த காலத்தைக் குறித்து வற்புறுத்தி கூறுகிறதாவது: இந்த "தீங்கு நாளில்" நிற்க திராணியுள்ளவர்களாகும்படி "தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும்" அணிந்து கொள்ள வேண்டும். (எபேசியர் 6:13) மேலும் அவர் இந்த அறுவடை காலத்தில் நம்மில் சிலர் அதிக தன்னம்பிக்கையை உணர்ந்து, அதனால் போதுமான விழிப்பும் ஜாக்கிரதையும் இல்லாதிருக்கலாம் என்று கூறுகிறார். அவர் நம்மை வற்புறுத்தி கூறுகிறதாவது: "தன்னை நிற்கிறவன் என்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன்." அதன் காரணத்தால் வசனம் 12, விழுந்து போகும் இந்த ஆபத்தை இஸ்ரயேலின் விழுந்து போகுதல் மற்றும் இடறுதல்களோடு இணைக்கிறது. இதை "நமக்கு திருஷ்டாந்தங்கள்" என்று அப்போஸ்தலர் நமக்கு கூறுகிறார்.

### இன்னொருவரின் யோசனைகள்

"நமக்கு திருஷ்டாந்தங்கள்" என்று அப்போஸ்தலரால் குறிப்பிடப்பட்ட ஐந்து பல்வேறு அனுபவங்கள் குறித்து சத்தியத்தில் இருக்கும் ஒரு பிரியமுள்ள சகோதரன் ஒரு கணிசமான அளவுக்கு எழுதுகிறார். இவைகளை மிகவும் ஜாக்கிரதையுடன் ஆராய்ந்து, இந்த திருஷ்டாந்தங்கள் இந்த அறுவடை காலத்தில் இரட்டிப்பான நிறைவேறுதலை காண்பதாக சகோதரன் நினைக்கிறார். மன்னாவுக்கு மாறாக, மாம்சத்தை விரும்பிய இஸ்ரயேலர்களுக்கிடையே படையெடுத்த காடைகளுக்கு ஒப்பாக, தேவனுடைய பிள்ளைகளுக்கு எதிராக படையெடுக்கிற டார்வின் கோட்பாடுகளை அவர் குறிப்பிடுகிறார். பரிணாம போதனைகள், வேதாகம போதனைகளாகிய மனிதனின் விழுகை, இயேசுவின் இரட்சிப்பின் வேலைகள், இறுதியில் அவரது இராஜ்யத்தின் உலகம் ஆசீர்வதிக்கப்படுதல் முதலானவைகளை புறக்கணித்து, மத உணர்விற்காக உலகப்பிரகாரமான போதனைகளை கொடுக்கிறது. விசேஷமாக, மனிதன் மிருகத்திலிருந்து இயற்கையாக அமையப்பெற்ற வலிமையினால் பரிணாமம் அடைந்திருக்கிறான் என்று போதிக்கிறது. கிறிஸ்தவ நாடுகளின் மீதான இந்த சோதனையானது மகா விலகலுக்கு வழி நடத்துகிறது. இதன் மூலம் அநேகர் அவர்களது ஆவிக்குரிய நம்பிக்கைளை இல்லையென்றால் அவர்களது ஆவிக்குரிய ஜீவனை இழந்திருக்கிறார்கள்.

இரண்டாவது சோதனையாக பொன் கன்றுக்குட்டியை வணங்குதல் என்று காண்பிக்கப்படுகிறது. ஆராதிக்கக் கூடிய ஒருவராய் ஞானம், நீதி, அன்பு மற்றும் வல்லமையில் வேதாகம திட்டத்தை பரிபூரணமாக வைத்திருக்கிற யேகோவா தேவனை ஆராதிப்பதற்கு பதிலாக சுயத்தை, சுய வேலைகளை ஆராதிப்பதாக சகோதரர் புரிந்து கொள்ளுகிறார். விமர்சகர்கள் இயக்கமே இதற்கு ஆதாரமாக இருக்கிறது. அதில் மதத் தலைவர்கள் சுய அன்பில் தங்களது அறிவை ஆராதிக்கிற பொருளாக வைத்திருப்பதாக தெரிகிறது. உண்மையான தேவனை ஆராதிப்பதிலிருந்து சரிவுக்கு காரணம் ஐசுவரிய ஆராதனை என்று அவர் நினைக்கிறார். இந்த சோதனையும் கூட தீங்கும் மரணமும் பலனாகியிருக்கிறது.

மூன்றாவது சோதனையைக் கூட அடையாளமாக அர்த்தப்படுத்துகிறார். இதன் அர்த்தமாக அவர் புரிந்து கொண்டதாவது: ஆவிக்குரிய காரியங்களுக்கும் லௌகீக காரியங்களுக்கும், உண்மையான காரியங்களுக்கும் தப்பறையான காரியங்களுக்கும் இடையேயான தவறான இணைப்பு. இது மதம், சந்தோஷம் மற்றும் பணம் பெறுதலோடு கலத்தல், பல்வேறு மதங்களோடு மற்றும் அரசியலோடு இணைகிற மனச்சார்பை குறிப்பிடுகிறது. இது கூட கிறிஸ்தவ தேசங்களில் ஆவிக்குரியவைகளை அழிக்கிறது என்று அவர் கூறுகிறார்.

நான்காவது பரீட்சையாக, கிறிஸ்துவுக்கு முன்னடையாளமான மோசேக்கு விரோதமாக கலகஞ் செய்தல். இதற்கு ''கிறிஸ்துவை குற்றஞ்சுமத்துதல்'' என்று அப்போஸ்தலர் கூறுகிறதற்கு ஒப்பிடுகிறார். ஜனங்கள் வாக்குத்தத்தங்கள் பண்ணப்பட்ட தேசத்திற்கு செல்வதற்கு ஏதோம் தேசத்தின் வழியாக செல்ல விரும்பினார்கள். ஆனால் மோசேயோ வனாந்தரத்தின் வழியாக மிகவும் சுற்றான வழியில் அழைத்துச் சென்றார். நமது நாட்களில் சகல பேர் கிறிஸ்தவ சபைகளிலும் சுய பலியின் இடுக்கமான வழிக்கு எதிர்ப்பு எழும்பியிருப்பதை ஒரு அடையாளமாக நமது சகோதரர் காண்கிறார். சுய பலி கானானின் வனாந்தர பிரயாணத்துக்கு அடையாளமாக இருக்கிறது. உலகத்துடனான ஐக்கியத்தையும் தற்கால சந்தோஷங்களையும் எடுத்துக்கொண்டு குறுக்கு வழியை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த சோதனை கிறிஸ்தவ நடத்தைகளில் உள்ள கட்டுப்பாடுகளை, அதிகாரப் பூர்வமாக நீக்குதலைக் குறிக்கிறது. இதன் மூலம் கிறிஸ்தவர்கள் திரையரங்கம் செல்வதும், கதைப் புத்தகம் படிப்பதும், சமூக சேவகம், சமூக மற்றும் அரசியல் சீர்திருத்தம் ஆகியவைகளில் ஈடுபடுவதும் பிரபலமாகிவிட்டது. இவர்கள் உயர்ந்த கிறிஸ்தவ ஊழியர்களாக கருதப்படுகிறார்கள்.

''இடுக்கமான வழியின்'' சீஷத்துவத்துக்கு எதிராகவும், வேத வாக்கியங்களின் மூலமாக கர்த்தரின் குரலுக்கு எதிராகவும், இயேசுவின் அடிச்சுவட்டில் நடக்கிறவர்களுக்கும் அதன்படி நடக்கும்படி போதிக்கிறவர்களுக்கும் எதிராகவும் முறுமுறுப்பு அங்கே இருக்கிறது. கொடிய சர்ப்பங்கள் முறுமுறுத்தவர்களில் அநேகரை கடித்தது. இதனால் அநேகர் வியாதிப்பட்டார்கள். இரட்சகரின் இரத்தத்தின் பலனாலே மட்டுமே நித்திய ஜீவனுக்குள் இரட்சிக்கப் -படுவார்கள். தற்காலத்தைக் காட்டிலும் இயேசுவை நோக்கி பார்க்கக்கூடிய இன்னும் அதிக சந்தர்ப்பம் உள்ள காலம் வரக்கூடியதாக இருக்கிறது. தேவனுக்கு ஸ்தோத்திரம்!

சோதனைகள் மற்றும் பரீட்சைகளின் ஐந்தாவது நிறைவேறுதல் இந்த அறுவடை காலத்தில் நம்மீது இருப்பதாக நமது சகோதரர் நம்புகிறார். இன்னும் தீவிரமான சோதனை வரும் என்றும் அது அநேகரின் ஆவிக்குரிய மரணத்தை அர்த்தப்படுத்தும் என்றும் கூறுகிறார். இதன் நிறைவேறுதலாக **காவற்கோபுர** வெளியீடுகளை தேவனுடைய கருவியாக ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு எதிரான பரந்த முறுமுறுப்புகளை சம்பந்தப்படுத்த அவர் விரும்புகிறார்.

இந்த ''நமது திருஷ்டாந்தங்கள்'' அனைத்தும் பேர் கிறிஸ்தவர்களுக்கு மாத்திரமல்ல, விசுவாச வீட்டாருக்கு தற்போது அளிக்கப்பட்டு வரும் ''காலத்துக்கு ஏற்ற போஜனத்தை'' அனுபவித்து வருகிறவர்களும், நாம் வாழ்கிற காலம் அறுவடை காலம் என்பதை பகுத்துணர்ந்து பார்க்கிற தேவனுடைய பிள்ளைகளுக்கும் விசேஷித்த பொருளில் இது பொருந்தும் என்று சகோதரர் நினைக்கிறார். இந்த முதல் நான்கு சோதனை மற்றும் பரீட்சைகளின் நிறைவேறுதலை அறுவடை வேலைக்கும் **காவற்கோபுர** வெளியீடுகளுக்கும் சகோதரர் ஒப்பிட்டு கூறுவதை நாம் விவரிக்க தேவையில்லை. ஆகையால் நமக்கு திருஷ்டாந்தங்களாக நமக்கு அறிவுரைக்காக எழுதப்பட்டதும் இந்த அறுவடை காலத்திற்கு உரியதுமான ஐந்தாவது சோதனைகளின் அவரது கண்ணோட்டத்தை நாம் கொஞ்சம் விவரிப்பதில் திருப்தி அடைவோம்.

## குஞ்சங்களில் குறித்துக் காட்டப்பட்டுள்ள ''பொருத்தனை''

''நமக்கு திருஷ்டாந்தங்களாக'' நமக்கு அறிவுரைக்காக இவைகளின் ஐந்தாவது காரியம் எண்ணாகமம் 16ஆம் அதிகாரத்தில் விளக்கமாக கூறப்பட்டுள்ளது. இந்த பதிவு 15ஆம் அதிகாரம் கடைசி நான்கு வசனங்களிலேயே ஆரம்பித்து விட்டது என்று நமது சகோதரர் வலியுறுத்திக் கூறுகிறார். அங்கே கர்த்தர் மோசேயிடம் கூறுகிறதாவது: ''நீ இஸ்ரயேல் புத்திரரிடத்தில் பேசி அவர்கள் தங்கள் தலைமுறைதோறும் தங்கள் வஸ்திரங்களின் ஓரங்களிலே தொங்கல்களை உண்டாக்கி ஓரத்தின் தொங்கலிலே இளநீல நாடாவை கட்ட வேண்டும் என்று சொல். நீங்கள் பின்பற்றி சோரம் போகிற உங்கள் இருதயத்துக்கும் உங்கள் கண்களுக்கும் ஏற்ப நடவாமல், அதைப் பார்த்து, கர்த்தரின் கற்பனைகளையெல்லாம் நினைத்து அவைகளின்படியே செய்யும்படிக்கு அது உங்களுக்கு தொங்கலாய் இருக்க வேண்டும். நீங்கள் என் கற்பனைகளையெல்லாம் நினைத்து அவைகளின்படியே செய்து, உங்கள் தேவனுக்கு பரிசுத்தராயிருக்கும்படி அதைப் பார்ப்பீர்களாக.'' (எண்ணாகமம் 15:38-40)

இங்கே தொங்கல்கள் என்று குறிப்பிடப்படுகிற எபிரேயு வார்த்தை ''சிட்சித்'' (Tsitsith) குஞ்சம் என்று பொருள்படுகிறது. யூதர்கள் இன்னும் இந்த கட்டளையை கடைபிடிக்கிறார்கள். அவர்கள் ஆசாரியர்களின் ஆடையை ஒத்திருக்கிற மாதிரி நடுவிலே தலைக்காக ஒரு துவாரத்தையும் மார்பு மற்றும் பின்புறம் சில அங்குலம் நீளமுள்ள ஒரு பரிசுத்தமான ஆடையை தங்கள் உடலின் மேல் அணிகிறார்கள். பரிசுத்த ஆடையின் ஓரத்தின் தொங்கல்களில் குஞ்சங்களை இணைக்கிறார்கள். இது ''கர்த்தருக்கு பரிசுத்தம்'' என்று அடையாளப்படுத்துகிறது.

இதை விளக்கும் போது, கர்த்தருடைய கருவியாகிய மோசே மூலமாக இந்த புதிய கட்டளை அல்லது ஆலோசனை கொடுக்கப்பட்டது என்று சகோதரர் கூறுகிறார். இஸ்ரேயல் புத்திரரில் பிரபலமானவர்கள் இரு நூற்றுஐம்பது பேரோடு கோராகு, தாத்தான், அபிராம் மற்றும் ஓன் இதைக் குறித்தே கலகம் பண்ணினார்கள். வெளித்தோற்றத்தில் அவர்களது கலகம் தேவனுக்கு விரோதமாக இல்லாமல், மோசேக்கு விரோதமாக இருந்தது. ஆனால் உண்மையில் அது தேவனுக்கு விரோதமாக இருந்தது; ஏனெனில் மோசே அவரது வெறும் கருவியாக மட்டுமே இயங்கினார்.

இவைகளை சகோதரர் பிரயோகித்து, ''கர்த்தருக்கு பொருத்தனை'' என்பது **காவற்கோபுர** பத்திகளில் மகா பரிசுத்தத்திற்கு ஒரு கருவியாகவும் கர்த்தரின் பிரமாணங்களை ஞாபகப்படுத்துவதற்கு உதவியாகவும் 1908இல் கர்த்தருடைய பிள்ளைகளுக்கு கொடுக்கப்பட்டது என்று சகோதரர் சுட்டிக்காட்டுகிறார். உண்மைதான், பொருத்தனையானது ஒரு கட்டளையாக கொடுக்கப்படாமல் வெறும் ஒரு யோசனையாக கொடுக்கப்பட்டது. அது ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் அவர்களது முயற்சியில் கிருபையிலும், அறிவிலும், பரிசுத்தத்திலும் ஒருவருக்கொருவர் தயவுள்ள ஐக்கியத்தில் வளரவும், பரலோக கிருபையின் சிங்காசனத்தின் அனுதின வேலைகளில் ஒருவருக்கொருவர் ஞாபகப்படுத்திக் கொள்ளவும் உதவியாக இருக்கும்படி கொடுக்கப்பட்டது. இந்த ''தீங்கு நாளில்'' அவர்களது ஆவிக்குரிய அனுகூலத்திற்கும் அவர்களது பாதுகாப்பிற்கும் இந்த யோசனை கொடுக்கப்பட்டது. ''யார் நிலைநிற்பான்'' என்ற

கேள்வி எழும்பொழுது "உத்தம இஸ்ரயேலர்" அனைவருக்கும் இருதய பூர்வமான பொறுப்பை கொண்டு வருவதற்குமாகும்.

குஞ்சங்கள் முதலானவைகளைப் பற்றிய கர்த்தரின் கட்டளைகளை மோசே கொடுத்த பிறகு அநேகர் ஆச்சரியப்படத்தக்கதாக உடனே கோராகுவின் தலைமையின் கீழ் லேவியர்களுக்குள்ளே, அர்ப்பணம் செய்தவர்களுக்குள்ளே கிளர்ச்சி வந்தது. இந்த கூச்சல் பரிசுத்தத்தைப் பற்றியதாக காணப்பட்டது. "இஸ்ரயேல் புத்திரரில் சபைக்கு தலைவர்களும் சங்கத்துக்கு அழைக்கப்பட்டவர்களும் பிரபலமானவர்களுமாகிய இருநூற்று ஐம்பது பேர்களோடும் கூட மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாகக் கூட்டங்கூடி அவர்களை நோக்கி: நீங்கள் மிஞ்சிப் போகிறீர்கள்; சபையார் எல்லோரும் பரிசுத்தமானவர்கள்; கர்த்தர் அவர்கள் நடுவில் இருக்கிறாரே; இப்படியிருக்க கர்த்தருடைய சபைக்கு மேலாக உங்களை உயர்த்துகிறீர்கள் என்றார்கள்." (எண்ணாகமம் 16:2,3)

இளநீல நாடாவோடே கட்டப்பட்ட "குஞ்சங்கள்" "நமக்கு திருஷ்டாந்தங்களாக" சொல்லப்பட்டது. (எண்ணாகமம் 15:38) "உங்கள் சொந்த இருதயத்தின்படியும் உங்கள் சொந்த மனதின்படியும் பேச வேண்டாம்" என்பதும், செய்யும்படி கர்த்தர் கொடுத்த சகல பிரமாணங்களை ஞாபகப்படுத்துவதற்கான உதவிக்காக அதை நோக்கி பார்க்குதல் என்பதுமாகிய பொருத்தனையை குறிக்கிறது. தேவனுடைய கட்டளைகளை நினைவுகூர்ந்து நமது சொந்த ஞானத்தின்படியும் நமது சொந்த மாம்சீக இருதயத்தின்படியும் பேசாமல், தேவனுடைய சகல சித்தங்களையும் தேவைகளையும் நினைவுகூர்ந்து செய்யவும், தேவனை மகிமைப்படுத்துவதற்கான ஆலோசனையே அந்த பொருத்தனையாகும். கோராகு, தாத்தான், அபிராம் மற்றும் ஓன் ஆகியோரின் எழும்புதல், இந்த பத்திரிக்கை மற்றும் காவற்கோபுர சங்கத்தின் கர்த்தரின் அறுவடை வேலைக்கு எதிராக எழும்புகிற எதிர்ப்புகளை அடையாளப்படுத்துகிறது. "நீங்கள் மிஞ்சிப் போகிறீர்கள், சபையார் எல்லாரும் பரிசுத்தமானவர்கள்" என்று பொருத்தனைக்கு விரோதமாக கூறுகிறார்கள். கர்த்தருடைய நிலைக்கு உங்களை ஏன் உயர்த்துகிறீர்கள்? சிந்தை, வார்த்தை, செயல் ஆகியவைகளின் மத முயற்சிகளின் நிலைக்கு மேலாக உங்களை ஏன் உயர்த்துகிறீர்கள்?

## மோசே வீணாக வாதாடினார்

மோசே எப்படி கெஞ்சினார், சிநேக பாவத்துடன் வாதாடினார்; எப்படி அவர் நிந்திக்கப்பட்டார் என்பதும் முடிவான பலனாகிய கோராகு, தாத்தான், அபிராம் மற்றும் அவர்களது குடும்பத்தாரும், பூமி பிளந்து விழுங்கி போடப் -பட்டதும், தூபங்காட்டின இருநூற்று ஐம்பது பேரும் அக்கினியினால் பட்சித்து போடப்பட்டதும் எண்ணாகமம் 16:4-35இல் விளக்கப்பட்டிருக்கிறது. பரிசுத்தமானவர்களாக தங்களை கூறிக்கொண்டவர்கள் கர்த்தரால் நிராகரிக்கப்பட்டதைப்போல உண்மைப்பொருளில் ஏதாவது ஒரு வழியில் தங்களது ஆவிக்குரிய வாழ்க்கையை இழப்பார்கள். அதாவது உலகத்தனம், வியாபாரம் முதலானவைகளால் விழுங்கப்படுவார்கள் என்பதைக் குறிப்பதாக விளக்கப்படுகிறது. தூபக்கலசத்தை எடுத்துக் கொண்டு அதில் தூபவர்க்கம் போடுகிறவர்கள், நமக்கு எதிராக கைப்பிரதிகளையும் விளம்பரத்தாள்களையும் கொண்டு வந்து தேவனுக்கு அர்ப்பணிப்பவர்களாக நமது சகோதரர் விளக்குகிறார்.

ஆரோன் தூபங்காட்டுகிறவர்களின் மத்தியிலே தூபவர்க்கத்தோடும் தூபக்கலசத்தோடும் நின்றான். அவனது தூபபலி மட்டுமே ஏற்றுக்கொள்ளப்பட்டது. இது இன்னும் எதிர்காலத்தில் நிறைவேறும் என்று நம்புவதாக நமது சகோதரர் நமது கவனத்துக்கு கொண்டு வருகிறார்.

கர்த்தரின் தெய்வீக ஏற்பாடுகளுக்கு எதிராக கலகஞ் செய்தவர்களுக்கு நீதியான தீர்ப்பளித்த கர்த்தரை அங்கீகரிப்பதற்கு பதிலாக இஸ்ரயேல் ஜனங்கள் இந்த காரியத்தோடு கர்த்தருடைய தொடர்பை புறக்கணித்து, கோராகு, தாத்தான் மற்றும் அபிராம் மற்றும் இருநூற்று ஐம்பது பேர்களின் மரணத்திற்கு மோசே மற்றும் ஆரோனை கண்டனம் செய்தார்கள். (வசனம் 41) அவர்கள் மோசே மற்றும் ஆரோனுக்கு விரோதமாகக் கூட்டங்கூடி முறுமுறுத்து கூறியதாவது: "நீங்கள் கர்த்தரின் ஜனங்களைக் கொன்று போட்டீர்கள்." முறுமுறுத்த ஜனங்களுக்கு விரோதமாக கர்த்தருடைய கோபம் எழும்பியது. அவர்களுக்குள்ளே வாதை தொடங்கி, பதினாலாயிரத்து எழுநூறு பேர் செத்தார்கள். ஆரோன் தூபவர்க்கத்தை தூபகலசத்திலுள்ள அக்கினியில் போட்டு ஜனங்களுக்கு நடுவே ஓடி பாவ நிவர்த்தி செய்தான். இதனால் மற்றவர்கள் காப்பாற்றப்பட்டார்கள். ஐந்தில் மிகவும் அழிவுக்குரிய வாதை இது என்று சகோதரர் கூறுகிறார். இதை முக்கியப்படுத்தி அப்போஸ்தலர் கூறுவதாவது: "இவைகளெல்லாம் நமக்கு திருஷ்டாந்தங்களாக இருக்கின்றன." " அவர்கள் முறுமுறுத்து சங்காரத்தினாலே அழிக்கப்பட்டார்கள். அது போல நீங்களும் முறுமுறுக்காதிருங்கள்."

## பாதுகாப்பாக நாம் கற்றுக்கொள்ளும் பாடங்கள்

முன்னமே குறிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு காரியத்தையும் முழுவதும் சம்மதியாமல், "நமக்கு திருஷ்டாந்தங்கள்" என்று கூறப்பட்டுள்ள இவைகளில் சில அம்சங்கள் சரியாக பொருந்துவதாக நாம் சொல்ல வேண்டும். இந்த நிழல்களிலிருந்து முழுவதும் ஒதுங்கி, இதிலிருந்தோ அல்லது வேறு எந்த விளக்கங்களிலிருந்தோ ஒதுங்கி இருந்தாலும், நாம் "சோதனை நாளில்" (வெளிப்படுத்தல் 3:10) "தீங்கு நாளில்" நாம் வாழ்கிறோம் என்பதையும் இந்த நாளில் இந்த யுகம் புதிய யுகத்தோடு இணையும் என்பதை நாம் அறிவோம். "நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டில் துவங்கியிருக்கிறது" என்பதை நாம் அறிவோம். இது அனைத்து கிறிஸ்தவ தேசங்களுக்கும் முடிவாக பரவும். உலகத்தின் நியாயத்தீர்ப்பு அல்லது சோதனை அல்லது உக்கிரமான சோதனை என்பது "யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்கால மட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலமாக" இருக்குமானால், விசுவாச -வீட்டாரிடத்தில் ஆரம்பித்திருக்கிறது மிகவும் உக்கிரமான சோதனையாக இருக்கும். "யார் நிலைநிற்கக்கூடும்" என்பதே கேள்வியாக இருக்கிறது. கிறிஸ்து இயேசுவில் பரிசுத்தமாக்கப்பட்ட பரிசுத்தமானவர்களே என்பதே பதிலாக இருக்கிறது.

அனைத்து மனித மற்றும் தெய்வீக பிரமாணங்களுக்கும், நியதிகளுக்கும் ஒழுங்குகளுக்கும் எதிரான கலகஞ்செய்யும் ஆவி நாம் சுவாசிக்கிற காற்றிலேயே இருப்பதாக தெரிகிறது. ஆகையால் தேவனுடைய பிள்ளைகள் சமாதானத்தை நாடி, முடிந்தவரை அதை அனைவரோடும் தொடர்ந்து அனுசரித்து, சண்டை பண்ணுகிறவர்களாக இல்லாமல், சமாதானம் பண்ணுகிறவர்களாக இருக்க வேண்டிய காலமாக இது இருக்கிறது. கர்த்தர் கட்டளையிடாத அநேகர் தூபவர்க்கத்தை தவறாது செலுத்துகிற காலமாக இது காணப்படுகிறது. உயரிய நோக்கம், போட்டி மற்றும்

ஆசையின் ஆவி, கர்த்தருடைய ஜனங்களிடையே மிகவும் பயங்கரமான எதிரிகளில் ஒன்றாக இருக்கிறது. அது அவர்கள் ஆளுகை செய்கிறவர்களுக்கு மாத்திரமல்ல, ஆளுகிறவர்களாகவும் போதிப்பவர்களாகவும் இருக்கப் போகிறவர்களுக்கும் ஆபத்தாக இருக்கும். "ஆகையால் ஏற்ற காலத்தில் தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்." (1 பேதுரு 5:6) என்பதே நம் ஒவ்வொருவருக்குமான பாடமாக இருக்கிறது.

தேவன் அவரது சபை காரியங்களில் மேற்பார்வையை எடுத்துக்கொண்டிருக்கிறார் மற்றும் அவர் தலையிட்ட அனைத்தையும் முடிக்க திறமையுள்ளவராக இருக்கிறார் என்பதை நாம் நினைவில் வைப்பதே தேவனுடனான விசுவாசம் என்பதே இன்னொரு பாடமாக இருக்கிறது. இதன் பலனாக கர்த்தருடைய வேலையுடன் சம்பந்தப்பட்ட எதையும் எப்படி செய்ய வேண்டும் அல்லது இருக்க வேண்டும், ஏற்படுத்த வேண்டும் அல்லது உடைக்க வேண்டும் என்பதில் விசுவாசமும் கீழ்ப்படிதலும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். கிறிஸ்துவின் சபையின் காரியங்களுக்கு சமமாக, அவர்களது அனைத்து காரியங்களிலும் தெய்வீக வழி நடத்துதலுக்காக மென்மேலும் எதிர்பார்த்து நோக்க வேண்டும்.

**R5269**

## LIVING AFTER THE FLESH

# மாம்சத்தின்படி வாழ்தல்

"மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள்." – ரோமர் 8:13

ரோமாபுரியில் வாழ்ந்த அர்ப்பணம் செய்த கிறிஸ்தவர்களுக்கு அப்போஸ்தலர் எழுதின இந்த வார்த்தைகள், இந்த யுகமுழுவதும் வாழ்கிற அனைத்து கிறிஸ்தவ ஜனங்களுக்கும் சமமாக பொருந்தக்கூடியதாக இருக்கிறது. சுவிசேஷயுகம் முழுவதற்கும் நிபந்தனைகள் ஒன்றாகவே இருக்கின்றன. அவைகள் மாற்றப்படவில்லை, மாற்றப்படவும் மாட்டாது. சிலுவையின் கொடியின் கீழாக, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் போர் வீரனாக ஆவது தற்கால வாழ்க்கையில் சோதனைகளையும் துன்பங்களையும் அடைந்து, அதைத் தொடர்ந்து வருகிற பரிசை அடைவதற்காகும். நமது அர்ப்பணத்தின் உடன்படிக்கையாவது: நாம் மானிடராக நம்மை முழுமையாக அர்ப்பணம் செய்ய வேண்டும். அதாவது நமது பூமிக்குரிய உரிமைகளையும் சலுகைகளையும் விட்டுவிட வேண்டும். ஏனெனில் நாம் அதின்மேல் அதிகாரம் பெற்றிருக்கிறோம். இது இதைக் காட்டிலும் இன்னும் அநேக காரியங்களை உள்ளடக்கியிருக்கிறது. மானிட உலகத்தின் அங்கத்தினர்களாக நமது நம்பிக்கைகளை விட்டுவிடுவதை இது உள்ளடக்கியிருக்கிறது.

ஆதாமின் கீழ்ப்படியாமையினால் இழந்த முழு மனித பூரணத்திற்கும் உலகத்தினரை கொண்டு வந்து, பாவத்திலிருந்து அவர்களை தேவன் விடுவிப்பார். இந்த சுவிசேஷ யுகத்தில் சலுகையை ஏற்றுக்கொள்ளுகிற நாம், இயேசுவின் மரணம் நமக்களித்திருக்கிற திரும்பப் பெறுகிற அனைத்து சலுகைகளையும் அர்ப்பணம் பண்ணுகிறோம். சபைக்கு கொடுக்கப்பட்டிருக்கிற நம்பிக்கைக்காக, இவைகளை நாம் அர்ப்பணம் பண்ணுகிறோம், மனித பூரணத்திற்காக அல்ல. ஆனால் தெய்வீக சுபாவமாகிய கனம், மகிமை மற்றும் சாகாமையை நமது ஆண்டவருடன் அடைவதற்கு தகுதியுள்ளவர்களாக ஆகக்கூடிய நம்பிக்கைக்காக ஆகும்.

இது வெறும் நம்பிக்கைகள் மட்டுமே. எதிர்கால பலன்கள் மட்டுமே. நாம் மகிமையான காரியங்களை பார்க்கவே இல்லை. அதைக்குறித்த கர்த்தரின் வெறும் வார்த்தைகளை மட்டுமே நாம் பெற்றிருக்கிறோம். பரலோக நம்பிக்கைகளுக்காக பூமிக்குரிய நம்பிக்கைகளை விட்டுவிடுகிறோம். பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப் –பட்ட இவர்களே புது சிருஷ்டிகள் என்று அழைக்கப் –படுகிறார்கள். இந்த புது சிருஷ்டிகள் மாம்சத்தின்படியல்ல, ஆவியின்படி வாழ வேண்டும். அதாவது அவர்கள் மாம்சம் சொல்லுகிறபடி நடவாமல், தேவனுடைய பரிசுத்த ஆவி சொல்லுகிறபடி நடக்க வேண்டும்.

### ஆவிக்குரிய வளர்ச்சியின் வழி வகைகள்

அவர்கள் கீழ்ப்படிய வேண்டிய இந்த பரிசுத்த ஆவியை அவர்கள் பல்வேறு வழிகளில் பெறுகிறார்கள். முக்கியமாக அதை ஜெனிப்பித்தலின் மூலம் பெறுகிறார்கள். அது தேவனிடத்திலிருந்து நேரடியாக கிடைக்கிற சக்தி. இப்படியாக ஆவிக்குரிய சிருஷ்டி கிருபையிலும் அறிவிலும் மற்றும் அன்பிலும் வளர ஆரம்பிக்கிறது. அதாவது கிறிஸ்துவுக்குள் வளரவும், கிறிஸ்துவின் சரீரத்துக்குள் முழு அபிவிருத்தி அடையவும் ஆரம்பிக்கிறது. மேலும் இந்த புது சிருஷ்டி தேவனுடைய வசனத்தினால் போஷிக்கப்பட வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அது தேவனுடைய வசனத்தை பயன்படுத்துவது மாத்திரமல்ல, ஜெபத்தில் பிதாவானவரிடம் சென்று தேவனுடைய அருளை கவனிக்க வேண்டியதாகவும் இருக்கிறது. அது அதன் தோல்விகளினாலும் தற்செயலான ஒழுங்குகளினாலும் சில காரியங்களை கற்றுக்கொள்ளலாம்.

இப்படியாக இந்த புது சிருஷ்டிகள் சகல காரியங்களிலும் தேவனிடத்தில் அவர்களது நம்பிக்கையையும் அவர்களது விசுவாசத்தையும் மெய்ப்பித்து காண்பிக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். இதை அவர்கள் தங்களது பிரயாணம் முடிவு வரை செய்தால், கடைசியில் மேசியாவின் மகிமையான ராஜ்யத்தில் ஆளுகை செய்வார்கள். தங்களது மரணம் வரை தங்களது விசுவாசத்தை மெய்ப்பித்து காட்டியவர்கள் கர்த்தருக்கு உடன் சுதந்தரராகும் வெகுமதியை பெறுவார்கள்.

முதன்முதலில் இந்த சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டவர் நமது மகா இரட்சிப்பின் அதிபதியாக இருந்தார். அவர் உண்மையுள்ளவராக காணப்பட்டார். அவர் பிதாவானவரின் சித்தத்துக்கு கீழ்ப்படிந்து தமது ஜீவனை கொடுத்தார். அவரது அனுபவங்களே பிதாவானவர் அவருக்காக ஊற்றிய பாத்திரமாகும். "கர்த்தாவே, உமக்குப் பிரியமானதை செய்ய விரும்புகிறேன்; உமது நியாயப்பிரமாணம் என் உள்ளத்திற்குள் இருக்கிறது" என்கிற இந்த வார்த்தைகள் அவரது உள்ளான ஜீவனுக்குள் எப்பொழுதும் இருந்தது. கிறிஸ்துவைப் போல் இலக்கை அடையப் போகிறவர்களும் அவரது ராஜ்யத்தில் அவருடன் உடன்சுதந்தரருமாக இருக்கப் போகிறவர்களும் பின்பற்ற வேண்டிய மார்க்கம் இதுதான்.

உடன்சுதந்தரர் என்பது சுதந்தரத்தை வேறு ஒருவருடன் பகிர்ந்து கொள்ளுகிறவராகும். பிதாவானவர் ஆரம்பத்திலிருந்தே, தலையாகிய கிறிஸ்துவை மாத்திரமல்ல, அவரது சரீரமாகிய சபையையும் பெற்றிருக்க வேண்டும் என்று தீர்மானித்திருந்தார். "இயேசுவை

முன்னறிந்தவர் நம்மையும் இயேசுவினால் முன்னறிந்தார்.'' அநேக பிள்ளைகளை மகிமையில் கொண்டு வந்து சேர்க்கையில் நமது இரட்சிப்பின் அதிபதியை உபத்திரவங்களினாலே, அவர் பட்ட பாடுகளினாலே பூரணப்படுத்துவது தேவனுக்கு ஏற்றதாக இருந்தது என்று அப்போஸ்தலர் கூறுகிறார். அந்த மகிமையான ராஜ்யத்தில் இணையப் போகிறவர்கள் அவர்கள் கடந்து செல்லுகிறவைகளின் மூலமாகவும் பாடுகளை சகிக்க வேண்டும். (எபிரேயர் 2:10; 2 தீமோத்தேயு 2:11,12)

நமது கர்த்தரின் சீடர்கள் கடக்க வேண்டிய சோதனைகளும் துன்பங்களும், பாவம் மற்றும் சாத்தானின் பாதகமான தாக்கங்களினாலும், உலக கவர்ச்சியினாலும் மானிட சுபாவத்தின் பலவீனத்தி -னாலுமே வருகிறது. இவைகளில் சிலவற்றை நமது ஆண்டவர் அனுபவித்தார். ஆனால் அவர் பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும் பாவிகளுக்கு விலகினவருமாயிருந்தார். அவைகளை நாம் முழுவதுமாக ஜெயம்கொள்ள இயலாது. ஆகையால் அறியாமல் செய்த கறைகளை மூடும்படி கிறிஸ்துவின் பலியின் புண்ணியத்தின் சாட்டுதலை பெறுகிறோம். இயேசுவுக்கு எந்தவித சலுகைகளும் கொடுக்கப் -படவில்லை. அபூரணமும் கறைகளும் உடைய நாம் இந்த இலக்கை அடையும் சந்தர்ப்பத்தை பெறும்படி இந்த ஏற்பாடுகள் நமக்காக செய்யப்பட்டுள்ளன. நமது ஒவ்வொரு அபூரணமும் கிறிஸ்துவின் புண்ணியத்தால் மூடப்படுகிறது. இப்படியாக நாம் நல்லவிதமாக இந்த ஓட்டப்பந்தயத்தை ஆரம்பித்திருக்கிறோம்.

நாம் பாவத்தை தடுப்பதோடு கூட, நமது உரிமைகளை விட்டு விட வேண்டும். நாம் சரியானபடி பெற்ற சோதனைகள் மகா மேன்மையும் கன நித்திய மகிமைக்கு ஏதுவாக நடக்கிறது என்பதை அறிந்து, நமது பொருட்கள் அழிவதை சந்தோஷமாக எண்ண வேண்டும். யாராவது பெயர், புகழ் மற்றும் வேறு எதுவின் இழப்பினால் பலவந்தப்படுத்தப்பட்டால், அவர் நல்ல ஆவியை உடையவராகவும் ஜெயங்கொண்டவராகவும் எண்ணப்படமாட்டார்.

### அவிசுவாசிகளில் இரண்டு வகுப்பார்

இரட்சகரின் அடிச்சுவட்டில் கடைசி வரை நடக்கிற நம்மை விசுவாசிகள் என்று விவரிக்கப்பட்டிருக்கிறோம். ஆனால் இன்னும் வேறு இரண்டு வகுப்பார் இருக்கிறார்கள். மறுபடியும் பாவத்துக்கு திரும்பினவர்களை பரிசுத்த பேதுரு, ''கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரள திரும்பினது'' என்று கூறுகிறார். (2 பேதுரு 2:22) அவர்களுக்காக எந்தவித ஏற்பாடும் செய்யப்படவில்லை. அவர்கள் தங்களது உடன்படிக்கையிலிருந்து முற்றிலுமாக பின்வாங்கிப் போனவர்கள். இவர்களுக்கு ''காரிருளைத்'' தவிர வேறு எதுவும் வைக்கப்படவில்லை என்று அப்போஸ்தலர் குறிப்பிடுகிறார்.

இன்னொரு வகுப்பார் இருக்கிறார்கள். அவர்கள் பாவச்சேற்றில் புரளச் சென்ற பன்றியைப் போல வாழ நினைக்காதவர்கள். அவர்கள் ஜீவகாலமெல்லாம் மரண பயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள். (எபிரேயர் 2:15) அவர்கள் பலியின் மரணத்திற்கு பயப்படுகிறார்கள். அவர்கள் தேவையான விசுவாசத்தையும் தைரியத்தையும் அப்பியாசப்படுத்த மாட்டார்கள். ஆண்டவரின் குணலட்சணத்தில் அவர்கள் குறைவு -படுவதால் அவர்கள் அனுகூலமான வகுப்பாராக இருக்க மாட்டார்கள். ஆனாலும் அவர்கள் மோசமானவர்கள் அல்ல. இருதயத்திலே விசுவாசம் உள்ளவர்கள். அவர்கள் அப்படியில்லாதிருந்தால், முன் விவரிக்கப்பட்ட வகுப்பாராக, பன்றி சேற்றில் புரள திரும்பினது போல இருப்பார்கள்.

இவர்கள் தம்மை நேசிப்பதாக தேவன் காண்கிறார். இன்னும் அவர்கள் சாதகமான சூழ்நிலையில் தேவனுக்காக வாழ்வதில் மிகவும் சந்தோஷப்படுவார்கள் என்றும் காண்கிறார். ஆனால் அவர்கள் அனுகூலமற்ற காலத்தில் வாழ்கிறார்கள். கர்த்தர் அவர்கள் மேல் மனதுருக்கம் கொண்டு, அவர்கள் சகலத்தையும் இழந்து விடாதபடிக்கு, தப்பிக்கும்படியான ஒரு வழியை ஏற்படுத்துவார். ஆகையால் சில சோதனைகள் அவர்கள் மேல் வரும்படி தேவன் அனுமதிக்கிறார். தேவனுடைய பராமரிப்பே இதை செய்கிறது. அப்போஸ்தலர் கூறுவது போல, அப்படிப்பட்டவனுடைய ஆவி கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாளில் இரட்சிக்கும்படும்படி, மாம்சத்தின் அழிவுக்காக அவனைச் சாத்தானுக்கு தேவன் ஒப்புக்கொடுக்கிறார். அவர்களது அனுபவங்களின் மூலமாக இப்படிப்பட்ட அனுகூலம் அவர்களை திரள் கூட்டத்தாருக்குள் நுழையவும் ஆவிக்குரிய சுபாவத்தை பெறவும் செய்யும். ஆனால் தெய்வீக சுபாவமாகிய உயர்ந்த ஆசீர்வாதத்திற்கு பாத்திரர்களாக எண்ணப்பட மாட்டார்கள்.

இந்த இரண்டு வகுப்பாருக்குள் யாரும் திடீரென்று போவதில்லை. ஒருவர் பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்ட அடுத்த நிமிடத்தில் இரண்டாம் மரணத்தில் மரிப்பதில்லை. ஆவியில் ஜெனிப்பித்தலுக்கும் தெரிந்தே பாவம் செய்யும் நிலைமைக்கும் அதிக வித்தியாசமுண்டு. ஒருவரை ஒருவர் தொடர்ந்து செல்ல முடியுமா என்பதை நாம் சிந்திக்க முடியாது. அவர்கள் எதிரிடையானவர்கள். ஒரு நிலைமையிலிருந்து இன்னொரு நிலைமைக்கு ஒருவர் செல்வது திடீரென்று நடக்கக்கூடியதல்ல. ஆகையால் இந்த வகுப்பார் கொஞ்சகாலம் செழிப்பார்கள். ஆனால் கிறிஸ்தவ வாழ்க்கையில் வரும் சோதனைகள், துன்பங்கள் மற்றும் துன்புறுத்தல்கள் படிப்படியாக அவர்களை விழுதலுக்கு எடுத்துச்செல்கிறது.

### தோல்விக்கான காரணம்

இந்த வகுப்பாரில் திட்ட அளவில் (Standard) வாழ்வதில் தோல்வி இருக்கிறது. இரண்டு வகுப்பிலும் நடுத்தரமான போக்கைக் கடைபிடிக்கக்கூடிய மனோபக்குவம் இருக்கிறது. அதாவது கர்த்தருக்கு நெருங்கியும் வாழாமல் அவரை விட்டு விலகியும் போகாத நிலைமை. அப்போஸ்தலர் கூறுவது போல நாம் மாம்சத்தின்படி வாழ்வதை தொடர்ந்தால், நமது பழைய சுபாவத்தை சந்தோஷப்படுத்தும் மார்க்கத்தை தொடர்ந்தால், அது நம்மை அழிவுக்கு வழி நடத்துகிற விசாலமான பாதைக்கு இட்டுச் செல்லும் என்பதை நாம் அறிவோம். ஆகையால் நாம் மாம்சத்தின்படி வாழ்ந்து அதைத் தொடர்ந்தால் முடிவு மரணமாயிருக்கும்.

கர்த்தர் தம்மை உண்மையாக நேசிக்கிறவர்களை, இருதயத்தில் விசுவாசமாயிருந்து தவறாக வெறும் அடியெடுத்து வைக்கிறவர்களை இரண்டாம் மரணத்திற்கு செல்லும்படி அனுமதிக்கமாட்டார் என்று வேத வாக்கியங்களிலிருந்து நாம் கற்றுக்கொள்கிறோம். அப்போஸ்தலர் யோவான் சொல்லுகிறதாவது: கிறிஸ்துவுக்குள்ளான ''ஒருவன் பாவம் செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து நமக்காக பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராக இருக்கிறார்.'' (1 யோவான் 2:1) அவன் இரக்கத்தைப் பெறவும் ஏற்ற சமயத்தில் சகாயம் செய்யும் கிருபையை அடையவும்

தைரியமாய் கிருபாசனத்தண்டையில் சேரக்கடவன். ஆனால் தவறான அடி எடுத்துவைத்தால் அது நம்மை இலக்கிலிருந்து மென்மேலும் தூரமாக செல்ல வழி நடத்தும். நாம் எப்பொழுதும் தொடர்ந்து செல்ல வேண்டும். மாம்சத்தின்படி நடக்கிறவர்களது மரணம் இரண்டாம் மரணமாக இருக்கும். ஏனெனில் இந்த புது சிருஷ்டிகள் முதலாம் மரணத்தை முன்னரே கடந்து விட்டார்கள். நாம் மரணத்திலிருந்து ஜீவனுக்குள் வந்து விட்டோம் என்று அப்போஸ்தலர் கூறுகிறார்.

தலைப்பு வசனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிற இந்த வகுப்பாராகிய நாம், கிறிஸ்துவின் பலியின் பங்கை பெற்றிருக்கிறோம். நமது பங்கை பெற்றிருந்து, அதை இழந்தால், அங்கே நமக்காக எதுவும் இருக்காது. இவர்களில் யாராவது அவர்களது பங்கை தவறாக பயன்படுத்தினால், அவர்கள் மரிக்கிற மரணம் இரண்டாம் மரணமாக இருக்கும். புது சிருஷ்டிக்கு ஒரு மரணம் தான் இருக்கும்; ஏனெனில் அதிலிருந்து இரட்சிப்பு இல்லை. அதற்கே உதவும்படியாக ஒவ்வொரு பராமரிப்பும் அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் தெரிந்தே பாவம் செய்கிற நிலைமையை எடுத்தால், ஏற்பாடு எதுவும் கிடையாது.

அப்போஸ்தலர் கூறுகிறதாவது: ‘‘சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களை ஜீவபலியாக ஒப்புக் கொடுக்க வேண்டும் என்று உங்களை வேண்டிக்கொள்கிறேன்.’’ இதைத்தான் விசுவாசமுள்ளவர்கள் செய்கிறார்கள், அதாவது தங்களது ஜீவனை கொடுக்கிறார்கள். இந்த நிபந்தனையில் தான் தெய்வீக சுபாவமாகிய மாபெரும் பரிசை அவர்கள் அடைவார்கள்!

**R5271**

### FIGHTING AGAINST GOD

## தேவனுக்கு விரோதமாக போரிடுதல்

சங்கீதம் 105: 23-36; யாத்திராகமம் 7:11

‘‘தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான். தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்.’’ - மத்தேயு 23:12

அநியாயம் செய்வது துன்பப்படுத்துகிறவருக்கும் துன்பப்படுகிற இருவருக்கும் தீமையை உண்டாக்குகிறது. இந்த கொள்கை பொதுவாக அங்கீகரிக்கப்பட்டால், மிகச் சிலரே அநீதி செய்ய, அநியாயம் இழைக்க முயற்சிப்பார்கள். வேதாகமம் எல்லாவிதமான அநீதியையும் மறுத்து, நீதி என்று வேறு பெயரை உடைய நியாயத்தை உயர்த்துகிறது, ஆதரிக்கிறது. எல்லா பாவங்களும் கொடுமையானதாகவும் பெரியதாகவும் இருக்கிறது. ஏனெனில் அவைகள் மற்றவர்களின் உரிமையை கெடுத்து அநீதியை இழைக்கிறது. நீதிக்குரிய பாடத்தை கற்றுக்கொள்ளுவது பொதுவாக அவ்வளவு கஷ்டமானது அல்ல என்று தெரிகிறது. இதைக் குறித்து நமது ஆண்டவர் தமது பொன்னான கற்பனையில் சுருக்கமாக விவரித்திருக்கிறார். ‘‘மனுஷர் உங்களுக்கு எவைகளை செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்கு செய்யுங்கள்.’’ (மத்தேயு 7:12)

இந்த வழியில் பாதுகாப்பு அவசியப்படாத தனிப்பட்டவர்கள் யாருமே இல்லை. ஒருவர் மீது உரிமையை எடுத்துக்கொள்ளும் சந்தர்ப்பம் ஒரு சோதனையாக வருகிறது. இது ஆயிரம் வடிவங்களைப் பெற்றிருந்தாலும் அது அநீதிதான். இது தொழிலாளிக்கு எதிராக முதலாளியினாலும், குழந்தைகளுக்கு எதிராக பெற்றோர்களாலும், மனைவிக்கு எதிராக கணவனாலும், நண்பனுக்கு எதிராக அண்டை வீட்டாராலும் அப்பியாசப் -படுத்தப்படுகிறது; அல்லது தலைகீழாக நடக்கிறது. எனினும் ஒவ்வொரு அநீதியிலும் அநீதி இழைக்கப்பட்டவர் போலவே அநீதி இழைத்தவரும் முடிவில் கடுமையாக துன்பப்படுவார் என்பதை நாம் உறுதியாக கூறுவோம். இந்த கொள்கை இன்றைய பாடத்தில் மிகவும் அழுத்தமாக விவரிக்கப்படுகிறது.

### எகிப்தியர்களுக்கு அடிமைத்தனத்தின் விலை

எகிப்தியர்கள் எபிரேயர்களை நடத்துவதை பல்வேறு காரணங்களினால் நீதிபடுத்தினார்கள். எபிரேயர்கள் எண்ணிக்கையிலும் பலமடைந்து வந்தார்கள். ஆகையால் எகிப்துக்கு விரோதமாக எதிரிகள் படையெடுத்து வந்தால், எபிரேயர்கள் எதிரிகளுக்கு உதவலாம் என்று கருதினார்கள். ஆகையால் எபிரேயர்களின் பெருக்கத்தை தடுக்க எகிப்தியர்கள் விரும்பினார்கள். இதில் தோல்வியடைந்த எகிப்தியர்கள் அவர்களை அடிமைப்படுத்தினார்கள். இந்த அடிமைத்தனம் எகிப்தியர்களுக்கு திருப்திகரமானதாகவும் லாபகரமானதாகவும் இருந்தது. அதன்பிறகு அடிமைகள் இல்லாமல் அவர்களால் சமாளிக்க முடியாது என்று நினைத்தார்கள். ஆகையால் இந்த பாடத்தின் காலத்தில் எகிப்தியர்கள் அவர்களது அடிமைகளை எப்படியாவது தடுத்து வைத்துக்கொள்ள தயாராக இருந்தார்கள்.

அநீதி, அநியாயம், அக்கிரமம் அதிகமாக இருந்ததினால் எபிரேயர்களை விடுவிக்க எகிப்தியர்கள் மேல் வாதைகள் அவசியமாக இருந்தன. இது அவர்கள் இழைத்த அநீக்கு ஈடாக நீதியான ஈடு செய்வதாக இருந்தது. ‘‘பாவம் செய்தவன்’’ எப்பொழுதுதாவது எப்படியாவது நீதியான சரிகட்டுதலாக, ‘‘துன்பம் அனுபவிப்பான்’’ என்கிற நீதிமொழி உண்மையாயிருக்கிறது.

எகிப்தியர்களின் மேல் வந்த வாதைகள் ஒரு விதத்தில் அதிசயத்தக்கவிதமாக இருந்தன. மற்றவை அப்படியல்ல. நமது அனுபவத்திற்கு அப்பாற்பட்டதாக இருந்தால் அதை அதிசயமானதாகவும், நமது அனுபவத்திற்குட்பட்டதாக இருந்தால் அதை இயற்கையானதாகவும் நாம் கூறுகிறோம். இப்படியாக தொலைபேசியையும், கம்பியில்லா தந்தியையும் நாம் அதிசயமாக எண்ணுகிறோம். ஏனெனில் அது எப்படி சத்தத்தை உண்டாக்குகிறது, அனுப்புகிறது என்பதை நாம் அறியவில்லை. (இது 1913ல் எழுதப்பட்ட கட்டுரை) ஐம்பது வருடத்திற்கு முன்னதாக இருந்த தரம் தாழ்ந்த மலர்களை காட்டிலும் தற்கால மலர்கள் பூரண அழகானவைகளாக இருக்கின்றன. இது எப்படி உண்டாக்கப்பட்டது என்பதை அறியாததனால் நமக்கு அது அதிசயமானதாக இருக்கிறது.

ஆனால் தேவனுடைய கருத்தில் எதுவுமே அதிசயமில்லை. ஏனெனில் எல்லாமே தெய்வீக ஞானத்திற்கும் சக்திக்கும் இசைவாக நடந்திருக்கிறது. சில காரியங்களை தேவன் நிறைவேற்றினார் என்கிற இயற்கையின் சட்டங்களையும் தெரிந்து நன்கு உணர்ந்திருக்கிறபடியால், கடந்த காலத்தில் அதிசயமாக இருந்ததெல்லாம் இப்பொழுது சாதாரணமாகிவிட்டது. ஆகையால் இந்த அதிசயத்தையும் இதை உண்டாக்கினவரையும் குறைவாக மதிப்பிடக்கூடாது.

இந்த கொள்கையை நமது பாடத்திற்கு பொருத்தும் போது எகிப்தியர்கள் மேல் வந்த பல்வேறு வாதைகள் நியாயமானது என்று நாம் எண்ணக்கூடும். ஆகையால் தேவனுடைய பிள்ளைகள் அந்த வல்லமையை அப்பியாசப்படுத்தினவரை பயபக்தியுடன் வணங்க வேண்டும். எகிப்தியர்கள் மேல் வந்த பத்து வாதைகள்

பத்துமாத காலத்தில் வந்திருக்கலாம் என்று நினைக்கலாம். அவைகள் எகிப்திய தேவர்களுக்கும் எபிரேயர்களின் தேவனாகிய யேகோவாவுக்கும் நடந்த ஒரு வெளியரங்கமான போட்டியாக இருந்தன.

பார்வோன்கள் தங்களை சூரிய கடவுளின் பிரதிநிதிகளாக கூறிக்கொண்டார்கள். ஆனால் அவர்களது அடிமைகளாகிய எபிரேயர்கள் காணப்படாத, வெளிப்படாத யேகோவா தேவனை தொழுதார்கள். இப்படியாக மோசே தெய்வீக கட்டளையின்படி பார்வோனிடம் பிரசன்னமாகி, இஸ்ரயேலர்கள் அவர்களது தேவனை ஆராதிக்கும்படி எகிப்தைவிட்டு செல்ல வேண்டும் என்று எபிரேயர்களின் தேவன் சொல்லியனுப்பினார் என்ற கூறினார். பார்வோன் ஏளனமாக, “எபிரேயர்களின் தேவன் யார்?” என்று கேட்டான். அவரை தனக்கு தெரியாது என்று கூறினான். அவன் தங்களது சூரிய கடவுள்தான் வல்லமையுள்ளவர் என்று கருதினான்.

மோசே தேவனுடைய பிரதிநிதி என்று அங்கீகரிக்கும் -படியாக சில அடையாளங்களை செய்யும்படி அவருக்கு தேவன் கட்டளையிட்டார். இவைகளில் ஒன்று, மோசே தனது கோலை கீழே போட்டபோது, அது சர்ப்பமாயிற்று. இது குறிப்பிடத்தகுந்த அடையாளமாக இருந்தது. ஆனால் பார்வோன் தனது மந்திரவாதிகளை அழைத்தான். அவர்களும் அதே போல் செய்தார்கள் அல்லது அப்படி தோன்றும்படி செய்தார்கள். சிலர் அது இந்தியாவில் செய்யப்படுகிறது போன்ற தந்திரமான காரியம் என்று யூகித்தார்கள். சர்ப்பத்தை ஹிப்நாட்டிசம் செய்து அதை கண்கட்டு செய்து ஒரு கோலைப் போல் காணச் செய்வது. பிறகு அதை ஹிப்னாட்டிசத்திலிருந்து விடுவித்து பிறகு அதை சர்ப்பத்தைப் போல வெளிப்படச் செய்வது. ஆனால் மந்திரவாதிகள் இதைக்காட்டிலும் அதிகமானதை செய்தார்களா என்பதை நம்மால் உறுதியாக சொல்ல முடியவில்லை. ஏனெனில் ஆரோன் மூலமாக மோசே செய்த வேலைகளை ஏமாற்றுதல் மூலம் செய்து காண்பிக்க முடியவில்லை?

அவர்கள் பயன்படுத்திய சக்தி என்ன? வேதவாக்கியங்களின்படி தெய்வீக சக்தி, சாத்தானுடைய சக்தி என இரண்டு வகை மறைவான சக்திகள் இருக்கின்றன என்று நாம் பதிலளிக்கிறோம். தேவன் நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக சாத்தான் மற்றும் பிசாசுகள் என்கிற விழுந்துபோன தூதர்கள் வல்லமையான கிரியைகளை செய்யும்படி அனுமதித்திருக்கிறார். இந்தியாவிலும், மிகவும் சமீபத்தில் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் பரவியிருக்கிற அமானுஷ்ய சக்திகள் என்று எண்ணப்படலாம். இதன் மூலமாக, ஆவி மீடியங்கள் இறந்தவர்களை உயிரோடிருப்பதாக காண்பிக்கிற தீய ஆவிகளின் வேலைக்காரார்கள் என்று நாம் குற்றஞ்சாட்டவில்லை. அவர்கள் வஞ்சிக்கப்பட்டவர்கள் என்பதால் நாம் அவர்களை மன்னிக்கிறோம். இவர்கள் குருடருக்கு வழிகாட்டுகிற குருடர்கள். இவர்கள் இன்னும் அதிகமதிகமாக உலகத்தை தீய சக்திகளுக்கு கீழாக கொண்டு வருகிறார்கள். இப்படியாக நூற்றில் ஒன்றாக இருக்கும் பைத்தியக்காரர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தி வருகிறார்கள்.

### தண்ணீர் இரத்தமாக மாறுதல்

இந்த வாதைகள் எல்லாம் ஜுன் மாதத்தில் ஆரம்பித்து தொடர்ந்து வந்த மார்ச் மாதத்தில் முடிவடைந்ததாக சொல்லப்படுகிறது. முதலாவது தண்ணீரை இரத்தமாக மாற்றுதல். இது கானாவூரிலே தண்ணீரை திராட்சை ரசமாக மாற்றின நமது ஆண்டவரின் அற்புதத்திற்கு சமமான ஒன்றாக இருந்தது. சிலர் இந்த அற்புதங்களின் விளக்கத்தை சிந்திக்கிறார்கள். இந்த அற்புதத்தை நடப்பிக்க தேவன் எப்படி தமது சக்தியை பயன்படுத்தினார் என்பதை முழுவதுமாக அறிந்துகொள்ளுவோம் என்பதில் நமக்கு சந்தேகமில்லை. அதே போல நமது ஆண்டவர் இயேசு தண்ணீரை திராட்சை ரசமாக்கினதில் எப்படி இரசாயன மாற்றத்தை ஏற்படுத்தினார் என்பதையும் அறிவோம். அனைத்து திராட்சை ரசமும் ஆரம்பத்தில் தண்ணீராக இருந்து. பிறகு இரசாயன மாற்றமடைந்து திராட்சை ரசமாக மாறியது. நமது இரசாயன விஞ்ஞானிகள் இயற்கையின் ரகசியங்களை ஆராய்ந்து வருகிறார்கள். தற்காலத்தில் பழங்களின் வாசனை செயற்கையான முறையில் தரப்படுகின்றன. சிலர் புல்லிலிருந்து நேரடியாக இந்த முறையில் பசும் பாலுக்கு சமமான பாலை உற்பத்தி பண்ணும் நம்பிக்கையில் இருக்கிறார்கள்.

வசந்த கால ஆரம்பத்தில் வெள்ளப்பெருக்குக்கு முன்னதாக நைல் நதியின் நீரை இரத்தத்தைப் போல பார்த்ததாக பயணிகள் நம்மிடம் கூறுகிறார்கள். இந்த நிறம் தண்ணீரில் உள்ள சில நுண்ணுயிரிகள் மூலம் கொடுக்கப்படுகிறது. தேவன் இந்த முறையை பயன்படுத்தி எகிப்தின் தண்ணீர்களை இரத்தமாகவோ, அல்லது இரத்தத்தைப் போல காணப்படும்படி செய்திருந்தால், பார்வோன் இப்படிப்பட்ட மாற்றங்களை முன்னரே கேள்விப்பட்டிருப்பான். மோசே மற்றும் ஆரோனின் திறமையால் அவர்களது கட்டளையால் இந்த மாற்றம் உடனே நிகழ்ந்தது. அதனிமித்தம் அது கெட்டுப்போனது. கெட்டுப் போனதால் நதியின் மீன்கள் செத்துப்போயின. அதன் தண்ணீரை குடிக்க முடியாமல் போனது. இன்னும் பார்வோனும் அவனது அதிகாரிகளும் அநீதியாக எபிரேயர்களை போக அனுமதிக்கவில்லை.

யேகோவா தேவன், இஸ்ரயேலர்களை விடுவிக்கச் செய்ய, அவர் கட்டளையிட்ட அடுத்த இரண்டாவது வாதை தவளைகளை அனுப்பியது. தவளைகளும் தேரைக்களும் வந்து எல்லா இடங்களையும், தெருக்கள், வயல்கள், வீடுகள், படுக்கையறை, படுக்கை, உணவுகள் எல்லாவற்றையும் நிரப்பின. அதிக எண்ணிக்கையில் தவளைகள் எப்பொழுதாவது சில சமயங்களில் எகிப்துக்கு வருவது உண்டு. ஆனால் இந்த சமயத்தில் தவளைகள் வந்தது போல் அவ்வளவு எண்ணிக்கையில் வந்ததேயில்லை. இது ஒரு குறிப்பிடத்தகுந்த காரியமாக இருந்தது. பார்வோன் இந்த வாதையிலிருந்து தற்காலிக விடுலை கிடைத்த பொழுது, தான் யேகோவாவுடன் போரிடுகிறதை ஏற்றுக்கொள்ளாமல், இன்னும் அவன் அடிமைத்தன அநீதியை தொடர்ந்தான். பார்வோனின் மந்திரவாதிகள் ஏதோ ஒரு வகையில் முதல் இரண்டு வாதைகளின் மூலம் கஷ்டத்தை இன்னும் அதிகப்படுத்தினார்கள். ஆனால் தவளைகளை அவர்களால் நீக்கக்கூடாமற் போயிற்று. பார்வோன் மோசேயை நோக்கி, “அந்த தவளைகள் என்னையும் என் ஜனங்களையும் விட்டு நீங்கும்படி கர்த்தரை நோக்கி வேண்டிக்கொள்ளுங்கள்” என்று கேட்டுக்கொண்டான்.

மூன்றாவது வாதை பேன்கள். டாக்டர் மெரின்ஸ் என்பவர் கூறுகிறதாவது: “பேன் என்ற வார்த்தை உண்ணியை, குறிக்கலாம். இது எகிப்தில் பொதுவாக காணப்படக்கூடிய ஒன்று. அது பாதிக்கப்பட்டவர்கள் மேல் ஒட்டிக்கொண்டு இரத்தத்தை உருஞ்சி, சில மணி நேரத்திற்குள் ஒரு சிறிய தானிய அளவிலிருந்து ஒரு பட்டாணி அளவிற்கு பெரிதாகிவிடும். சில குறிப்பிட்ட பருவ காலங்களில் அது புழுதியைப் போல பேனாக மாறிவிடும். அழுகிப்போன தவளைக் குவியல்கள் பல்வேறு கிருமிகளின் உற்பத்தி ஸ்தானமாயின.” அவர் சர் சாமுவேல் பேக்கர் (Sir Samuel Baker) என்பவரது மேற்கோளை

குறிப்பிட்டு கூறுவதாவது: "நான் இந்த உண்ணிகளினால் பாதிக்கப்பட்ட காய்ந்த பாலைவன இடங்களை நான் அடிக்கடி பார்த்திருக்கிறேன். இது மனிதன் மற்றும் மிருகங்களுக்கு மாபெரும் எதிரி." இந்த வாதையில் உண்ணிகளானது அசாதாரண எண்ணிக்கையில், அசாதாரண இடங்களில் பாலைவனத்தில் மாத்திரமல்ல எகிப்து முழுவதும் பரவியிருந்தது.

இந்த முதல் மூன்று வாதைகளும் இஸ்ரயேலர்கள் இடத்திலும் எகிப்தியரின் இடத்திலும் வந்தது என்பது கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். ஆனால் அதன்பிறகு வந்த அனைத்து வாதைகளிலிருந்து இஸ்ரயேலர்கள் மோசே முன்னரே குறிப்பிட்டது போல காக்கப்பட்டார்கள். கோசேன் தேசம் பாதுகாக்கப்பட்டது.

வண்டுகளின் வாதை, இந்த பாடத்தின் தலைப்பு வசனத்தில் சங்கீதக்காரர் கூறுவது போல குளவிகள், கொசுக்கள், வீட்டு ஈ மற்றும் கால்நடை ஈ போன்றவைகளாக இருந்தது. பரிதாபமான எகிப்தியர்கள் தங்களது அநீதிக்கு தக்கதாக வேதனையை அனுபவித்தார்கள். இஸ்ரயேலரோ இந்த வாதையிலிருந்து காக்கப்பட்டார்கள். பார்வோன் வருத்தப்பட்டு கூறியதாவது: "நான் உங்களை போக விடுவேன். ஆனால் நீங்கள் அதிக தூரமாக போக வேண்டாம்." தேவன் இரக்கப்பட்டு வாதையை நீக்கின போது, பார்வோன் தனது இருதயத்தை மறுபடியும் கடினப்படுத்தினான். இது கர்த்தரிடத்திலிருந்து வருகிற தண்டனையாக இருக்கும் என்பதை சந்தேகப்பட்டு பார்வோன் அவர்களை போக விட மறுத்தான்.

### கால்நடைகள் மேல் வாதை

அடுத்ததாக, கால்நடைகள் மேல் வாதை வந்தது. அது கால்நடைகள் மற்றும் மிருக ஜீவன்கள் மேல் வந்த சாவுக்கேதுவான வாதையாக இருந்தது. இது ரஷ்யாவின் மேல் வந்த மிருக கொள்ளை நோய்க்கு ஒப்பாக இருந்தது. அது சில வருடங்களுக்கு முன்னர் உலகெங்கிலும் பரவி, கால்நடைகள் வியாதிப்பட்டு மரித்தன. இஸ்ரயேலர்கள் மேய்ப்பர்களாக இருந்தார்கள். எனினும் அவர்களது கால்நடைகள் கோசேன் நாட்டில் தேவ கிருபையினால் காக்கப்பட்டன. "பூமியெங்கும் என்னைப்போல வேறொருவரும் இல்லை என்பதை நீ அறியும்படி செய்வேன்." இந்த மிருக கொள்ளை நோயினால் பண இழப்பு மிகவும் அதிகமாக இருந்தது. அதன்பிறகு கொப்புளங்களும் புண்களும் வந்தன. ராஜா முதல் தாழ்மையான வேலைக்காரன் வரை கொப்புளங்களால் துன்பப்படுகிற ஒரு தேசத்தை கற்பனை செய்து பாருங்கள்!

ஏழாவது வாதை சுழல் காற்று, கல்மழை அதனுடன் கூட அக்கினியுமாக இருந்தது. "கர்த்தர் எகிப்து தேசம் முழுவதும் கல்மழையையும், அக்கினியையும் அனுப்பினார்." "இடி முழக்கங்களும் கல்மழையோடே கலந்த அக்கினியும் மிகவும் கொடியதாயிருந்தது." அல்லது அக்கினி தரையின் மேல் வேகமாக ஓடிற்று. "கல் மழையும் கல்மழையோடே கலந்த அக்கினியும் மிகவும் கொடியதாயிருந்தது." அவர்களது பயிர்வகைகள் அழிக்கப்பட்டன. அவர்களது சொத்துக்கள் சேதமடைந்தன.

எட்டாவது வாதை திரளான வெட்டுக்கிளிகள். இது சில வருடங்களுக்கு முன்பு கான்சாஸ் மற்றும் நெபரஸ்கா போன்ற இடங்களில் வெட்டுக்கிளியினால் உண்டான வாதைக்கு ஒப்பாயிருந்தது. மற்ற சமயங்களில் நுபியாவிலிருந்து எகிப்துக்கு திரளான வெட்டுக்கிளிகள் வந்திருக்கின்றன. இவை பூமியை மைல் கணக்கான அளவுக்கும் பதினைந்து அங்குலம் ஆழத்திற்கும் மூடியிருந்தன. அது அழிக்கப்பட முடியாத எதிரியாக இருந்தது. அது பறந்து போகிறதற்கு முன்பு பச்சையான அனைத்தையும் சாப்பிடக்கூடியதாக இருந்தது. இந்த பேரழிவின் மத்தியில் பார்வோன், நான் பாவம் செய்தேன், என்னை மன்னிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டான். எனினும் ஆபத்து நீங்கின போது, நீதியின் வழியாகிய கர்த்தருடைய அழிவை எதிர்த்து அவன் தனது மனதை கடினப்படுத்தினான். அநீதியின் வெற்றியும், இதிலிருந்து எதிர்கால செழிப்பும் அவனை தைரியத்திற்கு வழி நடத்திற்று. அவன் இப்பொழுது சர்வ வல்லவரின் வல்லமையை கண்டுணர்ந்து கொண்டான்.

ஒன்பதாவது வாதை தேசமெங்கும் காரிருள். அது காணமுடியாமலும், வெளிச்சம் தெரியாமலும் வியாபாரங்களை எல்லாம் முடக்கின. லண்டன் பனியை ஒத்திருந்தது. இந்த காரிருள் சிலர் நம்புவது போல காற்றிலிருந்த புழுதி மூலமாக ஏற்பட்டிருக்கலாம் அல்லது சர்வ வல்லவர் ஆயிரக்கணக்கான வழிகளில் அதை கொண்டு வந்திருக்கலாம். எனினும் இஸ்ரயேலர்கள் குடியிருந்த கோசேன் தேசத்தில் இருள் விலக்கப்–பட்டிருந்தது, இஸ்ரயேலின் தேவன் அவர்களோடு இருந்தார் என்பதற்கு பார்வோனுக்கு இது இன்னும் ஒரு ரூபகாரமாக இருந்தது.

ஆழமாக ஈர்க்கப்பட்ட பார்வோன் முன்பைக் காட்டிலும் கொஞ்சம் மனம் இளகினான். ஜனங்கள் தங்கள் பிள்ளைகளோடு போகவும் தங்கள் மந்தைகளை விட்டுச் செல்லவும் அனுமதித்தான். இதை அவர்கள் ஏற்றுக்கொள்ளாதபோது, பார்வோன் மோசேயை நோக்கி, தன்னை மோசே இனி காணக்கூடாதென்றும் அப்படிக் கண்டால் மோசே சாக வேண்டும் என்றும் கூறினான். இந்த மிரட்டலுக்கு மோசேயிடமிருந்து வந்த அமைதியான பதில்: "நீர் சொன்னது சரி, இனி நான் உமது முகத்தைக் காண்பதில்லை." அடுத்த வாதை மோசே அறிந்த வண்ணமாக கடைசியானதாக இருந்தது. அதற்கு அவனது கடின மனது இணங்கும்.

**R5272**

**ISRAEL SPARED OR PASSED OVER**

## இஸ்ராயேல் காக்கப்பட்டது அல்லது கடந்து போகப்பட்டது

யாத்திராகமம் 12:21-31

மனுஷ குமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியம் செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனை கொடுக்கவும் வந்தார். – மத்தேயு 20:28

கிறிஸ்தவ ஜனங்கள் யூத பஸ்காவைப் பற்றி அது ஒரு ஏற்பாடு என்னும் பழங்கால நினைவுகூருதல் என்றும் கூறி, அதில் எந்தவித விசேஷித்த கவனமும் செலுத்துவதில்லை. அதற்கு காரணம் பஸ்காவின் அர்த்தம் பொதுவாக புரிந்து கொள்ளப்படாததேயாகும். உண்மையிலேயே யூதர்களைக் காட்டிலும் கிறிஸ்தவர்களே பஸ்காவில் அதிகமாக ஆழ்ந்த ஆர்வம் கொண்டிருக்கின்றனர். ஆனால் ஒரு வகையில் முழு உலகமே அதில் ஆர்வம் கொண்டிருக்கிறது. இன்றைய பாடத்தில் நாம் அதை பார்ப்போம்.

எபிரேயர்களுக்கு தொடர்ந்து அநீதி இழைத்து வந்ததால், எகிப்தியர்களுக்கு அனுப்பப்பட்ட பத்தாவது வாதை தலைச்சன்களின் மரணமாகும். எகிப்தின் ஒவ்வொரு வீட்டிலும் மரணம் சம்பவித்தது. அவரது குடும்பங்களின் மலராகிய முதற்பேரான குமாரன் அல்லது குமாரத்திக்கு மரணம் வந்தது. அந்த இரவின் பயங்கரத்தைக் குறித்து விளக்குவதைக் காட்டிலும் கற்பனை செய்து பார்ப்பது மேலானதாக இருக்கும்.

மரணம் என்பது வேதவாக்கியங்களில் மனிதனின் சத்துருவாக, பாவத்தின் தண்டனையாக எப்பொழுதும் குறிப்பிடப்படுகிறது. மரண தண்டனை நமது ஆதி பெற்றோர்கள் மீது பாவத்தினால் வந்தது; அவர்கள் மூலமாக பரம்பரை சட்டத்தின்படி அவர்களது பிள்ளைகள் அனைவருக்கும், மனுக்குலம் முழுவதற்கும் வந்தது. நாம்

அனைவரும் மரித்துக் கொண்டிருக்கிறோம்; தேவனுடைய சித்தத்தினால் மட்டுமே மரணத்திலிருந்து மீட்பு என்கிற நம்பிக்கையை பெறக்கூடும் என்று வேதாகமம் கூறுகிறது. "அநீதியுள்ளவர்களுக்கு பதிலாக நீதியுள்ள" இயேசுவின் மரணத்தின் மூலம் தேவ நீதிக்கான மீட்கும் பொருளை தேவன் ஏற்பாடு செய்திருக்கிறார். பாவத்திற்கும் மரணத்திற்குமான மாபெரும் பரிகாரம் சீக்கிரத்தில் மனுக்குலத்திற்கு பயன்படுத்தப்படும் என்றும் வேதாகமம் கூறுகிறது. மேசியாவின் ஆளுகையில் மரண தண்டனை ஒழிக்கப்படும், சாபம் நீக்கப்படும், இனி அங்கே பெருமூச்சும், அலறுதலும் மரணமும் இராது.

மாறாக, மரணத்தையும், சாபத்தையும் நீக்கிப்போடுதல் என்பது மகிமையடைந்த இரட்சகர் மூலமாக ஜீவனுக்கான ஆசீர்வாதத்தை கொண்டு வருதல் என்று பொருள்படும். முழுவதுமாக பிரகாசிக்கப்பட்டு தங்கள் கைகளில் தெய்வீக கிருபையை ஏற்றுக்கொள்கிற அனைவருக்கும் அவர் ஜீவனை கொடுக்கிறவராக ஆவார். பிதாவாகிய ஆதாமின் மகிமையான பூரணத்திற்கும், நித்திய ஜீவனின் சிலாக்கியத்திற்கும் விருப்பங்கொண்டு கீழ்ப்படிகிற அனைத்து மனுக்குலத்திற்குமான முழுமையான மீட்புக்கு உயிர்த்தெழுதல் என்கிற செயல்முறை ஆரம்பமாகும்.

ஆறாயிரம் வருடங்களாக முழு மனுக்குலத்திற்கும் தேவன் அளித்திருக்கிற அதே தண்டனையையே அந்த இரவில் எகிப்தியர் மேல் தேவன் கொண்டு வந்தார். தண்டனையானது மரணத்தில் அவ்வளவு அதிகமாக இல்லாதிருந்தாலும். அது சடுதியாக வந்தது மிக மோசமாக இருந்தது. நல்ல ஆரோக்கியத்துடன் ஓய்விலிருந்த முதற்பேறானவர்கள் காலைக்கு முன்னரே பிணமானார்கள். சாதாரணமாக நடப்பதை போல் அல்லாமல் மரண தண்டனையானது அவர்கள் மீது சடுதியாக வந்தது. அவர்கள் நித்திரையடைந்தார்கள்.

இந்த வாதையானது இஸ்ரயேலர்களின் வீடுகளை தொடவில்லை. அவர்களது முதற்பேறானவர்கள் சர்வ வல்லவரால் தப்புவிக்கப்பட்டனர், கடந்து போகப்பட்டனர், பாதுகாக்கப்பட்டனர். ஆகையால் தான் அதற்கு கடந்து போகுதல் (பஸ்கா) என்று பெயர் கொடுக்கப்பட்டது. தெய்வீக கட்டளையின்படி இந்த சரித்திர நிகழ்வை இஸ்ரயேலர்கள் ஆண்டு விழாவாக ஆக்கினார். ஒவ்வொரு இஸ்ரயேலனும் இந்த கடந்து போகுதலை (பஸ்கா) ஆசரிக்கும் போது தேவனிடத்திலான விசுவாசத்தையும் தனது முற்பிதாக்களின் இந்த தெய்வீக விடுதலையின் பதிவில் உள்ள தனது நம்பிக்கையையும் காண்பிக்கின்றான். இல்லையெனில் அவன் வஞ்சகம் பண்ணுகிறவனாக இருப்பான். ஏனெனில் இதற்கு வேறெந்த அர்த்தமும் இல்லை.

## கடந்து போகுதலின் (பஸ்காவின்) உண்மையான அர்த்தம்

கடந்து போகுதலில் இஸ்ரயேலர்களது அனுபவங்களானது உருவகமாக இருந்தன. ஒரு நிழலாக அவை தேவனுடைய தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் ஆவிக்குரிய இஸ்ரயேலரின் அனுபவங்களை அடையாளப்படுத்தின. ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் என்பது யூதர்கள், ரோமர்கள், பிரெஞ்சுக்காரர்கள், பிரிட்டிஷ்காரர்கள் போன்ற "சகல ஜாதிகளிலிருந்தும் கோத்திரங்களிலிருந்தும் ஜனங்களிலிருந்தும், பாஷைக்காரரிலுமிருந்தும்" கூட்டிச் சேர்க்கப்பட்ட தேவனுடைய பரிசுத்த ஜனங்களின் கூட்டம் என்பதை கவனிக்க வேண்டும். ஆவிக்குரிய இஸ்ரயேலின் பிரதானமான அங்கத்தினர்கள் மாம்சீக இஸ்ரயேலிலிருந்து வந்தவர்கள். ஆனால் எந்த தனிப்பட்ட ஜாதியும் எந்தவித பிரத்தியேக உரிமை கோரலையும் வைக்க முடியாது. இது ஒரு ஜாதியின் அடிப்படையிலோ முன்னுரிமை அடிப்படையிலோ தெரிந்தெடுக்கப்படாமல் குணலட்சண அடிப்படையிலே மாத்திரம் தெரிந்துகொள்ளப்பட்ட ஒரு வகுப்பாக இருக்கிறது.

ஆவிக்குரிய இஸ்ரயேலரின் இந்த வகுப்பார் அந்த இரவிலே கடந்து போகப்பட்ட மாம்சீக இஸ்ரயேலரின் முதற்பேறானவர்களால் குறிப்பிடப்பட்டார்கள். அடுத்த நாள் காலை சகல இஸ்ரயேலின் சேனைகளும் முதற்பேறானவர்களின் தலைமையின் கீழ் வெளியேறின. இந்த முதற்பேறானவர்கள், மகிமையடைந்த மேசியாவை ராஜரீக பிரதான ஆசாரியராக கொண்ட ராஜரீக ஆசாரியரை அடையாளப்படுத்துகிற ஆசாரிய வகுப்பாரை குறித்தனர். சீக்கிரத்தில் அவரும் அவருடைய "முதற்பேறானவர்களின் சபையும்" (எபிரேயர் 12:23) அவரது உயிர்த்தெழுதலில், முதலாம் அல்லது பிரதான உயிர்த்தெழுதலில் பங்கு பெற்று மகிமையடைவார்கள். அவர்கள் தேவனுடன் இசைவிற்குள் திரும்பி வர விரும்புகிற அனைவரையும் ஆசீர்வதிக்கிற மேசியாவின் ராஜ்யத்தின் வல்லமையிலும் மகிமையிலும் அமர்த்தப்படுவார்கள்.

கடந்த காலங்களில் வேதமாணவர்கள் தேவனுடைய வசனத்தை புரிந்து கொள்ளுவதில் மந்தமாகவே இருந்தனர். அவர்கள் படிப்படியாக தற்கால சிலாக்கியங்களின் வெளிச்சத்தில் தெய்வீக அன்பின் நீளத்தையும் அகலத்தையும் உயரத்தையும் ஆழத்தையும் அவர்கள் கற்பனை பண்ணிப்பார்க்க கூடாத அளவுக்கு தேவனுடைய வசனங்கள் முன்வைக்கிறது என்ற உண்மையை உணர்ந்துகொள்ளும் நிலைக்கு வந்து கொண்டிருக்கின்றனர். தேவன் முதற்பேறானவர்களின் சபையைப் பற்றி பேசும் போது, அவர் மற்ற குமாரர்களை கொண்டிருக்க நோக்கங்கொண்டிருக்கிறார் என்றும் இவர்கள் முதலாவது குமாரர்கள் மாத்திரமே என்றும் அவர் சுட்டிக்காட்டுவதாக வேதமாணவர்கள் தற்போது பார்க்கின்றனர். கடந்து போகப்பட்ட இஸ்ரயேலின் முதற்பேறானவர்கள் மாத்திரமே எகிப்தின் அடிமைத் தனத்திலிருந்து காக்கப்படாதது போன்று எகிப்தின் அடிமைத்தனமானது அடையாளப்படுத்துகின்ற பாவம் மற்றும் மரணத்தின் அடிமைத்தனத்தினின்று சபையின் முதற்பேறானவர்கள் மாத்திரமே காக்கப்படுவதில்லை. மாறாக, முதற்பேறானவர்கள் காக்கப்படுவது என்பது மீதியானவர்களின் விடுதலையையும் சுட்டிக்காட்டுகிறது.

இரவு மற்றும் பகல் என்கிற சொற்கள் கூட உண்மைப் பொருளில் முக்கியத்துவம் உடையதாக இருக்கின்றன. தேவனுக்கு இசைவாக இருக்க விரும்பின அநேகரை பாவம் மற்றும் மரணம் அடிமைப்படுத்தி ஆளுகை செய்த ஆறாயிரம் வருட காலத்தை வேதாகமம் இரவு என்று குறிப்பிடுகின்றது. இந்த இரவு காலத்தில் தேவனுடைய ஜனங்கள், பார்வோன் மற்றும் எகிப்தியர்களால் அடையாளப்படுத்தப்பட்ட சாத்தான் மற்றும் அவனது ஊழியக்காரர்களால் அதிகமாக ஒடுக்கப்பட்டு வந்தார்கள். "சாயங்காலத்திலே அழுகை தங்கும், விடியற்காலத்திலே களிப்புண்டாகும்" என்று தீர்க்கதரிசி அறிவிக்கிறது போல அது ஆறாயிரம் வருட நீண்ட காலப்பகுதியாக இருந்திருக்கிறது. (சங்கீதம் 30:5)

காலை என்பது மாபெரும் நிஜமான ஓய்வு நாளாகிய ஏழாவது ஆயிர வருட நாளின் விடியலை குறிப்பதாக இருக்கும். பிறகு மேசியாவும், தெய்வீக வல்லமையால் மரணத்திலிருந்து ஜீவனுக்கு கடந்து சென்ற அவரது முதற்பேறானவர்களின் சபையும் ராஜ்யத்தின் மகிமையில் அமர்த்தப்படுவார்கள். பிறகு தேவனுடன் இசைவுக்கு வர விரும்புகிற அனைவரையும் ஆசீர்வதிக்கிற மாபெரும் பணி ஆரம்பமாகும்.

இரவு என்று குறிப்பிடப்படுகின்ற தற்காலத்தின் இருளுக்கு மாறாக, புதிய யுகமானது தற்காலத்தைக் காட்டிலும் வேறுபட்டதாக இருக்கும் என்பதால் அது பகல் என்று உருவகமாக அழைக்கப்படுகின்றது. மேசியாவின் ராஜ்யமாகிய அந்த காலையில் அவர் மாபெரும் ராஜாவாக, ஒளியின் அதிபதியாக இருப்பார். அப்பொழுது இருளின் அதிபதி கட்டப்படுவான். ஓர் ஆயிரம் வருடம் கொண்ட அந்த

மகிமையான யுகத்தில் தேவனுடன் இசைவுக்கு வர விரும்புகிற மனுக்குல சேனைகள் அனைவரும் இஸ்ரயேலராக ஆவார்கள். அவர்கள் உண்மையான மோசேயினால் மீட்டெடுக்கப்பட்ட பரதீசுக்கு படிப்படியாக வழி நடத்தப்படுவார்கள். ஏதேனில் ஆதாமின் கீழ்ப்படியாமை -யினால் இழந்து போனதும், கல்வாரியில் இயேசுவினால் மீட்கப்பட்டதுமான அனைத்திலும் முழுமையான மீட்பை அடைவதில் விருப்பமில்லாதவர்களும் கீழ்ப்படியாதவர் -களுமாயிருப்பவர்கள் மட்டுமே தோல்வி அடைவார்கள்.

### "இஸ்ராயேல் என் சேஷ்ட புத்திரன்"

எந்த ஒரு ஆசீர்வாதமும் பாவம் மற்றும் மரணத்தின் வல்லமையிலிருந்து எந்த ஒரு விடுதலையும் தேவனுடைய கிருபையினால் உண்டானது, நீதியின் கட்டாயத்தினால் உண்டானதல்ல. ஆகையால் அவர் அனுப்ப திட்டமிட்டிருந்த ஆசீர்வாதங்களானது ஆபிரகாமின் சந்ததி அல்லது பிள்ளைகள் மூலமாக மனுக்குலத்தை அடைய வேண்டும் என்று நீண்ட காலத்திற்கு முன்னரே தீர்மானிப்பதற்கு முழு உரிமை உடையவராக இருந்தார். இதை அவர் தெளிவாக, ஆனால் மறைமுகமான வழியில் தெரிவித்துள்ளார். ஆபிரகாம் பரலோகத்திற்குரிய சந்ததி மற்றும் பூமிக்குரிய சந்ததி என்று இருவித சந்ததிகளை உடையவராக இருப்பார் என்று குறிப்பிட்டிருந்தார். ஆனால் யூதர்கள் இதை கவனிக்கவில்லை. அவர் கூறியதாவது: " உன் சந்ததி (1) வானத்து நட்சத்திரங்களைப் போலவும், (2) கடற்கரை மணலைப் போலவும் இருப்பார்கள்."

தேவன், ஆபிரகாமிடம் இதை விவரித்து கூறவில்லை. ஆனால் நாம் வாக்குத்தத்தத்தின் இந்த அம்சங்களை இப்பொழுது பார்க்கிறோம். நட்சத்திரங்களானது ஆபிரகாமின் பரலோக சந்ததியை, மேசியாவையும் அவரது மணவாட்டியாக உருவகமாக அழைக்கப்பட்ட அவரது சபையையும் குறிப்பிடுகின்றன. எண்ண முடியாத கடற்கரை மணல் என்பது "முதற்பேறானவர்களின் சபையாகிய" ஆவிக்குரிய சந்ததியின் மேசியாவின் ராஜ்யத்தில், முடிவாக பாவத்திலிருந்தும் மரணத்திலிருந்தும் இரட்சிக்கப்பட்டு தெய்வீக கிருபைக்கும் நித்திய ஜீவனுக்கும் மீட்கப்பட்ட மிகவும் திரளானவர்களைக் குறிப்பிடுகிறது. தேவன் ஆபிரகாமின் மாம்சீக சந்ததியினரை மறந்துபோகவுமில்லை, தம்முடைய தயவை விலக்கிக்கொள்ளவுமில்லை. ஏனெனில் அவர்களுக்கே முதலாவது சலுகை அல்லது வாய்ப்பு வந்தது. மேலும் இவர்களிடமிருந்தே ஆவிக்குரிய ஆபிரகாமின் சந்ததியாகிய இந்த ஆவிக்குரிய இஸ்ரயேலர்களின் முதலாம் அங்கத்தினர்கள் கூட்டிச் சேர்க்கப்பட்டார்கள். அவர்களைக் குறித்து பரிசுத்த பவுல் கூறுகிறதாவது: "நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால் ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்." ஆபிரகாமுடன் செய்யப்பட்ட வாக்குத்தத்தத்தின்படி பாவத்தின் சாபமும், மரணமும் நீக்கப்பட்டு அவரது ஆவிக்குரிய சந்ததியும் சகல மனுக்குலமும் தெய்வீக ஆசீர்வாதத்தை பெறுவார்கள். (கலாத்தியர் 3:29; வெளிப்படுத்தின விசேஷம் 21:4,5; 22:3)

ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் பூமிக்குரிய சுபாவத்திலிருந்து பரலோக சுபாவத்திற்கு மாறுவது நிறைவடைந்த பிறகு, தேவனுடைய ஆசீர்வாதம் ஆபிரகாமின் மாம்சீக சந்ததிக்கு வர ஆரம்பிக்கும். இப்படியாக தேவனுடைய கிருபை, ஆவிக்குரிய சிலாக்கியங்கள் முதலாவது யூதர்களுக்கும், பூமிக்குரிய சிலாக்கியம், மானிட பூரணத்திற்கு வருதல் முதலாவது யூதர்களுக்கும் கிடைக்கும். (ரோமர் 11:25-33; அப்போஸ்தலர் 3:19-21)

### முதற்பேறானவர்கள் இரத்தத்தினால் பாதுகாக்கப்பட்டனர்

இஸ்ரயேலின் முதற்பேறானவர்களிடத்தில் காண்பி -க்கப்பட்ட தேவ கிருபையானது இரத்தத்தினால் மாத்திரமே என்பதை நாம் கவனிக்க தவறாதிருப்போமாக. உண்மையிலேயே பழைய ஏற்பாட்டின் வேத வாக்கியங்களின் முழு பாடமுமே பரிசுத்த பவுல் குறிப்பிடுவது போல, "இரத்தஞ் சிந்துதல் இல்லாமல் பாவ மன்னிப்பு உண்டாகாது" என்பதாகும். தெய்வீக கட்டளையின்படி இஸ்ரயேலர்கள் ஒரு வயதுள்ள பழுதற்ற ஆட்டுக்குட்டியை தெரிந்துகொண்டு, அதை அடித்து, அதன் இரத்தத்தை தங்கள் வீட்டு வாசலின் நிலைக்கால்களிலும் மேல் சட்டங்களிலும் தெளித்து, தங்கள் வீட்டுக்குள்ளிருந்து அதன் மாம்சத்தை புசித்ததின் மூலம் கர்த்தரிடத்தில் தங்கள் விசுவாசத்தை காண்பித்தனர்.

பஸ்காவானது நிழலாக இருந்ததால், ஆட்டுக்குட்டியும் இரத்தந்தெளிக்கப்படுதலும் கூட நிழலாக இருக்கின்றது. ஆட்டுக்குட்டியானது தேவ ஆட்டுக்குட்டியான இயேசுவை, கறைதிரையற்றவரும், பரிசுத்தரும், மாசில்லாதவரும், குற்றமற்றவருமான இயேசுவைக் குறித்தது. அவரது மரணமானது அவரது சொந்த பாவங்களுக்காக இல்லாமல், மனுக்குலத்தின் பாவங்களுக்காகவே ஆகும். இன்னும் கிறிஸ்து சபைக்காக மாத்திரம் மரிக்காமல் வேதவாக்கியங்கள் அறிவிக்கிறது போல, முழு உலகத்தின் பாவங்களுக்காகவும் மரித்தார் என்பதை கவனிப்பது முக்கியமானதாக இருக்கிறது. சபையானது உலகத்தின் ஒரு சிறு பகுதியினரை மட்டுமே உடையதாக இருக்கிறது. அதாவது முதற்பேறானவர்களின் பகுதி. பரிசுத்த யாக்கோபு கூறுவது போல (1:18) தேவனுடைய சிருஷ்டிகளில் நாம் முதற்பலன்களாக இருக்கிறோம். சபையானது இரவிலே கடந்து போகப்படுகின்றனர். மற்றவர்களைக்காட்டிலும் முன்னரே விசேஷமாக இரட்சிக்கப்படுகின்றனர். ஆனால் இரத்தத்தின் புண்ணியத்தினால் மட்டுமே காக்கப்பட்டார்களே ஒழிய மற்றப்படியல்ல. இரத்தமானது முதற்பேறானவர்களை மாத்திரம் மூடவில்லை என்பது நிழலில் இரத்தமானது முதற்பேறானவர்களின் மேல் தெளிக்கப்படாமல் விசுவாச வீட்டாரை குறிக்கிற வீட்டின் மேல் தெளிக்கப்படுவதின் மூலம் அடையாளப் -படுத்தப்படுகிறது.

**R5274**

## EVIL DOERS AND BUSYBODIES

# பொல்லாங்கு செய்கிறவர்களும் அந்நிய காரியங்களில் தலையிட்டுக் கொள்ளுகிறவர்களும்

''ஆதலால் உங்களில் ஒருவனும்..... பொல்லாங்கு செய்தவனாயாவது, அந்நிய காரியங்களில் தலையிட்டுக் கொண்டவனாவது பாடுகிறவனாயிருக்கக்கூடாது.'' - 1 பேதுரு 4:15

நிச்சயமாக கர்த்தருடைய பிள்ளைகளில் யாரும் வேண்டுமென்றே தீங்கு செய்பவர்களாக இருக்க மாட்டார்கள். வேண்டுமென்றே தீங்கு செய்பவர்கள் கர்த்தருடைய ஆவியை உடையவர்களாயிராமல் சத்துருவின் ஆவியை உடையவர்களாக இருக்கிறார்கள். இப்படி இருக்குமானால் உண்மையாக அர்ப்பணம் செய்தவர்களுக்கு எதிராக சொல்லப்பட்ட மோசமான காரியமாக இருக்கும். அவன் ஒரு தவறினால் மேற்கொள்ளப்பட்டிருப்பான் அல்லது சில மாம்சீக பலவீனங்களை உடையவனாக இருந்திருப்பான் அல்லது அவனது இருதயம் ஏற்றுக்கொள்ளாத எதையாவது செய்யும்படி சத்துருவின் கண்ணியில் விழுந்திருப்பான். ஆனால் தீய செயல்கள், அறியாமல் செய்ததாக இருந்தாலும் ஜாக்கிரதையாக கவனிக்கப்பட வேண்டும்.

“உங்களில் ஒருவனும் பொல்லாங்கு செய்கிறவனாயிருந்து பாடுபாடுகிறவனாயிருக்கக்கூடாது.” அதாவது யாரும் எந்த சமயத்திலும் எந்த சூழ்நிலைகளின் கீழும் இப்படி நடக்கக்கூடாது.

இப்பொழுது நாம் அப்போஸ்தலரது எச்சரிக்கையில் இரண்டாம் பாகமாகிய அந்நிய காரியங்களில் தலையிடுபவர் என்பதற்கு வருகிறோம். பரிசுத்தவான்களும் கூட மற்றவர்களைப் போல அந்நிய காரியங்களில் தலையிட்டு துன்பப்படுகிறவர்களாக காணப்படுகிறார்கள். கர்த்தருடைய அர்ப்பணம் செய்த ஜனங்கள் மற்றவர்களைக் காட்டிலும் அதிகமாக அந்நிய காரியங்களில் ஈடுபட விருப்பமுள்ளவர்களாக இருக்கிறார்கள் என்று சில சமயங்களில் நாம் நினைத்திருந்தோம். அவர்கள் மற்றவர்களைக் காட்டிலும் உயர்ந்த தரநிலையை (Standard) உடையவர்களாக இருக்கிறார்கள். நீதியின் மேலுள்ள அவர்களது அன்பும், அக்கிரமத்தை வெறுப்பதிலும் அவர்கள் முன்னிருந்ததைக் காட்டிலும் உயர்ந்தவர்களாக இருக்கிறார்கள். ஆகையால் தங்களது காரியங்களை கவனிப்பதில் மாத்திரம் திருப்தியடையாமல் மற்றவர்களுக்கு புத்தி சொல்வதிலும், ஒவ்வொருவரையும் மற்றும் ஒவ்வொன்றையும் சரிபண்ண நாட்டம் உடையவர்களாகவும் இருக்க தொடர்ச்சியான தூண்டுதல் இருந்துவருகிறது.

தங்கள் பிள்ளைகள் அல்லது தங்களது நேரடியான பொறுப்பில் உள்ளவர்களின் காரியங்களை ஆராய்தல் நிச்சயமாக பெற்றோர்களின் கடமையாக இருக்கிறது. ஆனால் இதில் கூட தனிப்பட்டவர்களின் உரிமைகளிலும் அந்தரங்க காரியங்களிலும் தலையிடாமல் இருக்க நாட வேண்டும். ஒரு குறிப்பிட்ட சரியான அளவான பொறுப்புகளை பிள்ளைகள் மேல் வைக்க வேண்டும். அவர்கள் தங்களிடம் என்ன எதிர்பார்க்கப்படுகிறது என்பதை பொதுவாக அறியப்பண்ண வேண்டும். அந்த அளவுக்கு அதை அளவிடக் கூடியவர்களாக இருக்க வேண்டும். இல்லையென்றால் அது மாறான காரியத்தை குறிப்பிடும். அந்நிய காரியங்களில் தலையிடுகிற ஆவியை அப்போஸ்தலர் கண்டிக்கிறார். தேவனுடைய ஜனங்கள் அனைவரும் அதற்கெதிராக தங்களை காத்துக்கொள்ள வேண்டும்.

சபையில், எல்லா எக்லீசியாவிலும் அந்நிய காரியங்களில் தலையிடுவது சங்கடத்துக்கு மூல ஆதாரம் என்பது நமது அனுபவமாக இருக்கிறது. தற்கால சத்தியத்தில் ஒரு தெளிவான அறிவு, சங்கடத்தை அதிகப்படுத்தும் என்று தெரிகிறது. குடும்பங்களில் இன்னொரு அங்கத்தினருடைய காரியங்களை தெரிந்துகொள்ள விரும்புவதால் தவறான உணர்வுகள் பெறப்படுகிறது போல, சபைகளிலும் மற்றவர்களது காரியங்களில் ஈடுபடுவதும் விசாரிப்பதும் தலையிடுவதுமான சுபாவம் இருக்கிறது. அதாவது அந்நிய காரியங்களில் தலையிடும் சுபாவம் இருக்கிறது. சில காரியங்களில் ஒருவருக்கொருவர் சம்பந்தப்பட்ட சகல காரியங்களையும் தேடி கண்டுபிடித்து, உட்கார்ந்து அதை நியாயந்தீர்க்கிற மனநிலையே காணப்படுகிறது.

அன்பில் குறைவுபடுதலே இந்த சிரமத்திற்கு காரணம். “அன்பானது பிறருக்கு பொல்லாங்கு செய்யாது.” (ரோமர்13:10) அது குறைபாடுகளை காண்பதில் சந்தோஷமடையாது; அதை தேடவும் செய்யாது; அது தீமையை நினைக்காமல் நன்மையையே நினைக்கும். கர்த்தரின் ஜனங்களில் ஒவ்வொருவரும் இந்த காரியத்தில் தன்னைத்தானே சோதித்தறிந்து, மற்றவர்களது காரியங்களில் எந்த அளவுக்கு நாம் தலையிடுகிறவர்களாக இருக்கிறோம் என்பதை காண்பார்களாக. ஒவ்வொருவரும் தங்கள் சொந்த காரியங்களில், தங்கள் தவறு எந்த அளவுக்கு இருக்கிறது, அன்பின் ஆவி குறைவுபடுகிறது என்பதை தீர்மானித்து, ஜெபத்துடன் கர்த்தரிடம் சென்று அன்பின் குணலட்சணத்தில் கட்டப்பட ஆர்வத்துடன் நாட வேண்டும்.

தான் கண்ட சகோதரனிடத்தில் அன்பு கூராதவன், தான் காணாத தேவனிடத்தில் அன்புகூருவது நிச்சயமில்லை என்பதை நாம் நன்கு அறிவோம். கிறிஸ்துவின் சரீர அங்கங்களின் மாமிசத்தில் குறையை கண்டுபிடிப்பதில் சந்தோஷப்பட்டால், இருதயத்தில் கசப்புணர்ச்சி இருக்கிறது என்று நாம் பாதுகாப்பாக முடிவு செய்யலாம். இரட்சகராலும் அர்ப்பணத்தினாலும் நீதிமானாக்கப்பட்ட அவர்களது மாமிசம் அவரது மாமிசமாகிறது. ஆகையால் சகோதரர்களது காரியங்களில் தவறு கண்டுபிடிக்கிறவர்களும் தலையிடுகிறவர்களும் இதை இயேசுவின் மாமிசத்துக்கு எதிராக செய்கிறார்கள்; “நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே.” (அப்போஸ்தலர் 9:5; 22:8)

## சத்துருவானவனால் சிக்குண்டவன்

சகோதரர்களில் யாரும் தீங்கிழைக்கும் அன்பற்ற மார்க்கத்தை வேண்டுமென்றோ, தெரிந்தோ அல்லது விருப்பத்துடனோ செய்வார்கள் என்பதை நம்ப முடியாது என்பது சகோதரர்களிடத்தில் நாம் கொண்டுள்ள நம்பிக்கையாக இருக்கிறது. தேவனுடைய பிள்ளைகளை கண்ணியில் சிக்கவைக்கவும், கடமை, நீதியை சிநேகித்தல், நியாயம் முதலானவைகளின் போர்வையில், அந்நிய காரியங்களில் தலையிடுதல் மற்றும் அன்பின்மையின் ஆவியை அபிவிருத்தி செய்யவும் சத்துருவானவன் மிகவும் விழிப்பாயிருக்கிறான் என்பது நமது எண்ணமாக இருக்கிறது. ஒருவருக்கொருவர் தீர்ப்பு செய்யவோ அல்லது ஒருவருக்கொருவர் நியாயத்தை வற்புறுத்தவோ நமக்கு தேவன் அதிகாரம் அளிக்கவில்லை என்ற உண்மையை அவர்கள் கவனிக்க தவறுகிறார்கள். தேவனுடைய ஜனங்கள் எந்த வகையிலும் ஒருவருக்கொருவர் தண்டிக்கவோ, ஒருவருக்கொருவர் தண்டனை கொடுக்கவோ அவர் அதிகாரம் கொடுக்கவில்லை. அவருடைய ஜனங்களை விசாரிப்பவராகவோ, புலன் ஆய்வாளராகவோ, பிறர் அலுவல்களில் தலையிடுபவர்களாகவோ ஆகும்படி அதிகாரம் கொடுக்கவில்லை.

மாறாக “காலத்துக்கு முன்னே தீர்ப்பு செய்ய வேண்டாம்” என்றும் இந்த காரியத்தை அவர் கவனிப்பார் என்றும் நமக்கு அவர் கூறியிருக்கிறார். “கர்த்தர் தம்முடைய ஜனங்களை நியாயந்தீர்ப்பார்” என்று எழுதப்பட்டிருக்கவில்லையா? (எபிரேயர் 10:30) அவர் திறமையற்றவர் என்று பயப்படுகிறோமா? நாம் அவரை விட ஞானவானாக முயற்சிக்கிறோமா? அவருடைய கைகளில் விட்டுவிடுங்கள் என்று அவர் சொன்ன காரியங்களை நமது கைகளில் எடுத்துக்கொள்ளலாமா? நாம் அப்படி செய்வோமானால் நாமும் சிரமத்திற்கு ஆளாகி மற்றவர்களையும் சிரமத்திற்குள்ளாக்குவோம்.

அந்நிய காரியங்களில் தலையிட்டுக் கொண்டவர்கள் யாராயிருந்தாலும் துன்பப்படுவார்கள், பாதிக்கப்பட்டவரும் துன்பப்படுவார், அநேகரும் துன்பப்படுவார்கள், அந்நிய காரியங்களில் தலையிட்டுக்கொண்டவர்கள் தப்பிக்க முடியாது. அந்நிய காரியங்களில் தலையிட்டுக் கொண்டவர்களுக்கான ஒரு பகுதி தண்டனை, தேவனுடனான சொந்த உறவு முறிதல். அவர்களது சமாதானம், சந்தோஷம், பரிசுத்த ஆவியுடனான ஐக்கியம் தொலைந்து போகும். அந்நிய காரியங்களில் தலையிட்டுக் கொண்டவர்களுக்கு இதுவே தேவன் கொடுக்கும் வெகுமதி.

சபையில் ஒரு சகோதரனுக்கும் ஒரு சகோதரிக்கும் கஷ்டம் இருக்குமானால், நீங்கள் உங்கள் வேலையைப் பார்த்துக்கொண்டு, காரியங்களை அவர்களிடையே சரி -பண்ணிக்கொள்ள அனுமதியுங்கள். அவர்கள் பெற்றோர்களும் குழந்தைகளுமாயிருந்தால் அவர்கள் தங்களுக்குள்ளே சரி பண்ணிக்கொள்ளட்டும். தேவன் அவர்களது நியாயாதிபதியாக, போதனையாளராக இருந்து கொடுக்கிற பாடத்தை அவர்கள் கற்றுக்கொள்ளட்டும். அவர்கள் கணவன், மனைவியாக இருந்தால் இதே போல நடக்கட்டும். அவர்களை தனித்து விடுங்கள். அந்த காரியங்களில் நீங்கள் தலையிட வேண்டாம். அவர்களில் யாராவது வந்து உங்களிடம் உங்கள் அறிவுரையை கேட்டால், தேவனுடைய ஆலோசனையை பின்பற்றி மெதுவாக கூறுங்கள். முழு காரியத்தையும் கேட்க மறுத்து விடுங்கள். உங்கள் ஆலோசனையை கேட்டவர்களிடம் கர்த்தர் நமக்கு அறிவுரைகளை கொடுத்திருக்கிறார், நான் அதில் தலையிடக்கூடாது, மத்தேயு 18:15-17 வசனங்கள் நாம் பின்பற்ற வேண்டிய மார்க்கத்தை காட்டுகிறது என்று கூறுங்கள்.

கர்த்தர் அளித்திருக்கிற இந்த ஏற்பாடுகளுக்கு இசைவாக இந்த காரியம் உங்களிடத்தில் வந்தால் ஒழிய இதில் தலையிடாதபடி பார்த்துக்கொள்ளுங்கள். இல்லை -யென்றால் நீங்கள் அந்நிய காரியங்களில் தலையிடுகிற -வராயிருந்து உங்களையும் தொந்தரவு படுத்திக்கொண்டு மற்றவர்களையும் தொந்தரவுக்கு உள்ளாக்குவீர்கள். குடும்ப பிரச்சனைக்கு அழைக்கப்பட்டால், அவர்களது விவகாரங்களில் மூக்கை நுழைப்பதைக் காட்டிலும் வருத்தப்படுவது மிகவும் அவசியம். “தேவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கக்கடவன்” என்ற இயேசுவின் வார்த்தைகளை அவர்களுக்கு ஞாபகப்படுத்தி உங்களால் முடிந்த அளவு அவர்களுக்கு புத்தி சொல்லி அவர்களுக்குள்ளேயே சரி செய்து கொள்ளும்படி கூற வேண்டும். அவர்கள் பிரியும்படி எதையும் சொல்லாதபடி நீங்கள் பார்த்துக்கொள்ள வேண்டும். பிரிவினை ஆரம்பித்திருக்கிற அங்கே அதை நிறைவடைவதற்கான எதையும் செய்யாதபடி நீங்கள் பார்த்துக் கொள்ள வேண்டும்.

தேவனுடைய பிரதிநிதியாக இருந்து ஒரு சிறிய அளவில் கூட அவர்களை குழப்புகிற எதையும் செய்யக்கூடாது என்பதையும், நீங்கள் சமாதானம் பண்ணுகிற வேலையை செய்யவே அனுப்பப்பட்டிருக்கிறீர்கள் என்பதையும் ஞாபகத்தில் வைக்க வேண்டும். இப்படிப்பட்ட காரியங்களுக்கு நீங்கள் அழைக்கப்படும் பொழுது, நீங்கள் நியாயமாகவும், நீதியாகவும் அறிவிற்கு ஏற்புடையதாகவும், நீங்கள் பேசுகிற ஒவ்வொரு வார்த்தையும் பொன்னான கற்பனைக்கு இசைவாக இருக்கும்படியாகவும் முயற்சிக்க வேண்டும். எதிர்காலத்தில் உலகத்தின் நியாயத்தீர்ப்பு தங்களுக்கு கொடுக்கப்படும் என்று நம்புகிறவர்கள் (1 கொரிந்தியர் 6:2) தற்போது இரக்கம், அன்பு மற்றும் நீதி போன்ற உயர்ந்த குணங்களில் அபிவிருத்தி அடைந்து தகுதி பெற வேண்டும்.

### அந்நிய காரியங்களில் ஈடுபடுவது என்பது பெருமைக்கு சாட்சியம்

ஆனால் ஒருவர், சபையை பரிசுத்தமாக வைத்திருப்பது நமது கடமைகளில் ஒரு பங்கில்லையா? என்று கேட்கிறார். அப்படி செய்தவற்கு நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டாமா? ஆகையால் ஒரு கணவனும் ஒரு மனைவியும் அல்லது ஒரு சகோதரனும் ஒரு சகோதரியும் அல்லது பெற்றோர்களும் பிள்ளைகளும் இணக்கமாக இல்லாதிருப்பதை நாம் பார்க்கும் பொழுது, அவர்களது காரியங்களில் நாம் அக்கறை காட்டி அவர்களை சரி செய்வது நமது கடமையில்லையா?

அதுதான் சரியான அந்நிய காரியங்களில் தலையிடும் ஆவியாகும். கர்த்தரின் அநேக ஜனங்கள், மிகவும் நல்ல காரியம் என்று நினைத்து, அந்நிய காரியங்களில் ஈடுபடும் போது, அது அந்நிய காரியங்களில் ஈடுவது என்பதை அறியாதிருக்கிறார்கள். ஆகையால்தான் இதை குறிப்பிடுகிறோம். உங்கள் சொந்த காரியங்களைப் பாருங்கள்! மற்றவர்களை நீங்கள் கவனிப்பதில் நீங்கள் மிகவும் பரபரப்பாக இருந்தால் சத்துரு உங்களை பிரயோஜனப்படுத்திக் கொள்ளுவான். எந்த ஒரு சகோதரனோடோ அல்லது சகோதரியோடோ வெளிப்படையான தொடர்பு இருந்து அது நியாயமானதாகவும் பண்பானதாகவும் நீதியுடனும் இருந்தால், அவர்களது அலுவல்களில் ஈடுபடுகிறோம் என்ற பொருளில் தலையிடக்கூடாது. அவர்கள் சாந்தம், விசுவாசம், பொறுமை, சகோதர அன்பு, அன்பு ஆகிய குணங்களுக்கு அவர்கள் போதுமான அளவுக்கு ஒரு நல்ல உதாரணம் என்று தீர்ப்பதில் திருப்தியடையுங்கள். அவர்களுக்கு எப்பொழுதாவது அறிவுரை தேவைப்பட்டால் அவர்கள் உங்களிடம் வலிய வரலாம். பிறகு நீங்கள் நிதானத்துடன் மத்தேயு 18:15-17 வசனத்திற்கு இசைவாக தேவனுடைய வாக்காக அறிவுரை வழங்குவது உங்கள் நேரமாக இருக்கும்.

ஆனால், கொரிந்து சபையில் மிகவும் கடுமையான பாவம் செய்த ஒருவன் இருந்ததால், பரிசுத்த பவுல் சபையை குறை கூறவில்லையா? அப்படிப்பட்ட நபரை, நீங்கள் தீர்ப்பு செய்து நீக்காமலிருந்ததற்காக சபையை அவர் குறை கூறவில்லையா? என்று வேறொருவர் கேட்கிறார். முற்றிலும் உண்மைதான். அந்த பாவம் வெளியில் தெரிந்த, வேண்டுமென்றே செய்த, பாவம் என ஒப்புக்கொள்ளப்பட்டதும் தனிப்பட்டவருக்கும் அவரை சார்ந்த அனைவருக்கும் இழிவானதாகவும் இருந்தது. இன்றைக்கும் அது போல இருக்க வேண்டும். யாராவது ஒருவர் வெளிப்படையான பாவத்தில் வாழ்ந்து, அதை ஒப்புக்கொண்டு பெருமை பேசினால் அது உடனடியாக சபையினால் மத்தேயு 18:15-18 வசனத்தின் அடிப்படையில் கவனிக்கப்பட வேண்டும். குற்றமிழைத்தவர் தவறான மனோபாவத்தில் அதைத் தொடர்ந்து செய்தால், வெளியரங்கமான பாவமாக இருந்தால், அவரை நீக்குவதுதான் முடிவாக இருக்க வேண்டும். அவர் முழுமையாக சீர்திருந்தும் வரை சபையிலிருந்து விலக்கப்பட வேண்டும்.

இப்படிப்பட்ட காரியங்கள் கர்த்தருடைய பிள்ளைகளிடத்திலே மிகவும் அபூர்வமானது. இந்த காரியங்களில் அப்போஸ்தலர் யோசனையாக கூறுகிற முறைமைகளும் அபூர்வமானது. கிறிஸ்துவின் சபையில் உள்ளவர்களின் கடந்த கால வாழ்க்கையை விசாரணை பண்ணச்சொல்லி அப்போஸ்தலர் பரிந்துரைக்கவில்லை. மாறாக, சபையில் இருந்த அநேகர் ஒரு காலத்தில் மானக்கேடான குணலட்சணத்தில் இருந்தது தனக்கு நன்றாக தெரியும் என்று அவரது நிருபங்களில் ஒன்றில் கூறுகிறார். அவர் கூறுகிறதாவது: “உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்களாயிருந்தீர்கள்; ஆயினும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள், பரிசுத்தமாக்கப் -பட்டீர்கள், நீதிமான்களாக்கப்பட்டீர்கள்.” (1கொரிந்தியர் 6:11)

ஒவ்வொருவரையும் சரி பண்ணும் வேலை நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற எண்ணம் முற்றிலும் தவறானது. இப்படிப்பட்ட எண்ணத்தைக் கொண்டிருப்பது பெரிய அளவிலான பெருமையை குறிப்பிடுகிறது. சில சகோதரன் மற்றும் சகோதரி நல்ல ஒத்திசையில் இல்லையென்றால் அவர்கள் தனியாக இருக்கட்டும். அவர்கள் நெருக்கமாக இல்லாதிருப்பது நல்லது என்று நினைத்தால் தனியாக இருக்கட்டும். அவர்கள்

திருமணமானவர்களாக இருந்தால், தனியாக வாழ்வது நல்லது என்று அவர்கள் நம்பினால், அவர்கள் தனியாக இருக்கட்டும். நீங்கள் உங்கள் வேலையை பாருங்கள். அங்கே சில ரகசியமான தவறு இருந்தால் அவர்கள் தனியாக இருக்கட்டும். "தேவன் அவருடைய ஜனங்களை நியாயந்தீர்ப்பார்." வேதவாக்கியங்களில் நாம் காண்பதைக் காட்டிலும் இன்னும் வேறு வேலையை அவர் கொடுத்தால் ஒழிய அதில் தலையிடுவது உங்கள் வேலையல்ல.

**R5277**

## CROSSING THE RED SEA

# சிவந்த சமுத்திரத்தைக் கடத்தல்

யாத்திராகமம் 14 : 19-31

''அவர்கள் கூப்பிடுகிறதற்கு முன்னே நான் மறு உத்தரவு கொடுப்பேன்.'' - ஏசாயா 65:24

இஸ்ரயேலர்கள் அற்புதமாக சிவந்த சமுத்திரத்தை கடந்தது பற்றியும் பிற்பாடு அதில் எகிப்திய படைகள் முற்றிலுமாக அழிந்ததையும் பற்றிய வேதாகம கூற்றை விஞ்ஞானிகள் நீண்ட நாட்களாக கேள்வி கேட்டார்கள். இஸ்ரயேலில் புருஷர்கள் மாத்திரம் 600,000 பேர், எல்லாரையும் சேர்த்து 20,00,000க்கும் மேலாக என்பதையும் அவர்கள் கேள்வி கேட்டார்கள். எனினும் கடைசியாக வேதாகமம் வெற்றிக் கொண்டது. நமது தவறான புரிந்து கொள்ளுதலுக்கு தவறான மொழி பெயர்ப்பும் சரியாக விளக்கப்படாததுமே அடிப்படை காரணம்.

வேதவாக்கியங்களில் பயன்படுத்தப்பட்டுள்ள அலாஃப் (Alaf) என்ற எபிரேய வார்த்தை ஓர் ஆயிரத்தையும் மற்ற சமயங்களில் ஒரு கூட்டத்தையும் குடும்பங்களையும் அல்லது கூடாரங்களையும் குறிப்பதாக பேராசிரியர் ஃபிலிண்டர்ஸ் பெட்ரி (Prof. Flinders Petrie) நமது கவனத்தை ஈர்க்கிறார். இதே மாதிரி ஆயிரம் பேர் கொண்ட ஒரு குழுவை ரெஜிமெண்ட் என்று குறிப்பிடுகிறோம். விசேஷமாக போருக்கு பிறகு இன்னும் எண்ணிக்கையில் குறைவாக இருந்தாலும் அதையும் ரெஜிமெண்ட் (பட்டாளம்) என்று அழைக்கிறோம். "யூதா 74,600" என்பது "74 குடும்பங்கள் அல்லது கூடாரங்கள் எல்லாவற்றிலும் 600 புருஷர்கள்'' என்று புரிந்து கொள்ளப்பட வேண்டும். "தங்கள் தங்கள் பிதாக்களுடைய வம்சங்களின்படியே பிரயாணப்பட்டு போனார்கள்." (எண்ணாகமம் 2:34)

இப்படியாக கணக்கிடப்பட்டு எகிப்திலிருந்து புறப்பட்ட இஸ்ரயேலர்கள் சேனை புருஷர்கள், ஸ்திரீகள் மற்றும் குழந்தைகள் உட்பட மொத்தம் 30,000 பேர் இருநூறு வருடங்களுக்கு கொஞ்சம் அதிகமான காலத்தில் யாக்கோபின் சந்ததியினர் இவ்வளவு பேர் உண்டாயிருந்தது நல்ல ஒரு சேனை தான். இஸ்ரயேலர்கள் தங்களைக் காட்டிலும் ஜனத்தொகையில் மிஞ்சிவிடுவார்கள் என்று பயந்து இஸ்ரயேலர்களின் குழந்தைகளை அழிப்பதற்கு எகிப்தியர் கட்டளையிட்டும் கூட இஸ்ரயேலர்கள் சந்தான விருத்தியுள்ளவர்களாக இருந்தார்கள் என்பதற்கு இது சாட்சியமாக இருந்தது.

### அற்புதங்களுக்கான அவசியம்

ஒரு அற்புதமானது இயற்கையின் சட்டத்திற்கு மாறாக இருக்க வேண்டும் என்று அவசியமில்லை. ஒரு ஆச்சரியமான, வழக்கத்திற்கு மாறான சம்பவம் மானிட காரியங்களில் தெய்வீக வல்லமையின் குறுக்கீடு, அது இயற்கை சட்டங்களால் உறுதி பண்ணப்பட்டால் கூட அது ஒரு அற்புதமாக இருக்கும். ஒரு அவசியம் இல்லாமல் தேவன் அற்புதங்களை நிகழ்த்தமாட்டார்.

பாலஸ்தீனாவை நோக்கி மூன்று சாலைகள் எகிப்திலிருந்து சென்றன. ஆனால் ஒன்று இராணுவ சுவருடன் மத்திய தரைக்கடலிலிருந்து செங்கடல் வரை அந்நியர் படையெடுப்பை தடுப்பதற்காக இருந்தது. எகிப்துக்கு செல்லும் இந்த சாலைகள் நல்ல பலமான இரும்பு வாயிற்கதவுகளால் பாதுகாக்கப்பட்டன.

இவைகளில் ஒரு சாலை பெலிஸ்தரின் நாட்டுக்கு செல்லக்கூடியது. ஜனங்கள் கூட்டமாக செல்ல தடை பண்ணப்பட்டிருந்தது. இரண்டாவது சாலை மணல் நிறைந்த பாலைவனமாக இருந்தது. அங்கு தண்ணீரும் தீவனமும் இல்லை. ஆகையால் அது முற்றிலுமாக தகுதியற்றதாக இருந்தது. மூன்றாவது சாலையைத் தான் இஸ்ரயேலர்கள் தெரிந்து கொண்டார்கள். அது சீனாய் மலையின் வனாந்தரமாக இருந்தது. அங்கே மேய்ச்சல் நிலத்தை கண்டார்கள்.

எகிப்தியர்களின் முதற்பேறானவர்களின் மரணத்திற்கு பிறகு, இஸ்ரயேலர்கள் யாத்திரையை ஆரம்பித்து செங்கடலை அடைவதற்கு முன்பு அநேக நாட்கள் கடந்தன. இந்த நாட்களில் பார்வோனும் அவனது ஜனங்களும் அவர்களது துக்கத்திலிருந்து ஓரளவுக்கு மீண்டிருந்தனர். இஸ்ரயேலர்க எகிப்தைவிட்டு வெளியேற சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டபோது, இஸ்ரயேலர்கள் எந்த வழியாக செல்வது என்று அலைந்திருப்பார்கள் என்று உணர்ந்தான்; அவர்கள் தங்களது புதிய சுதந்திரத்தாலும் பிரயாணத்தினாலும் களைத்திருப்பார்கள் என்று தீர்மானித்து, அவர்களை திருப்பி கொண்டு வருவது சுலபமானது என்று பார்வோன் முடிவு செய்தான். வாயிற்கதவுகள் மூட கட்டளையிடப்பட்டு, நூற்றுக்கணக்கான ரதங்களும் காலாட்படைகளும் இஸ்ரயேலர்களை பின் தொடர அனுப்பப்பட்டன.

இதற்கிடையில் இஸ்ரயேலர்கள் இரண்டு மலைத் தொடர்களிடையே கடந்து, செங்கடலின் வடக்கு பகுதியில் சூயஸ் வளைகுடாவுக்கு சென்றிருந்தனர். இஸ்ரயேலர்கள் தப்பிக்க இயலாதபடி பட்டிக்குள் சென்றிருந்தனர். தேவன் எகிப்தியர்களுக்கு மேலாக மேகம் அல்லது பனி மூட்டத்தையும் இஸ்ரயேலரது பாளையத்துக்கு மேலாக பிரகாசமான வெளிச்சத்தையும் ஏற்பாடு செய்திருந்தார். இப்படியாக எகிப்தியர்கள் தாமதப்படுத்தப்பட்டார்கள். இஸ்ரயேலர் கடற்கரை மட்டும் வந்து அங்கே தொடர்ந்து போக முடியாமல் தடைபட்டார்கள். பிறகு அவர்கள் மோசேயிடமும் தேவனிடமும் கூக்குரலிட்டார்கள். அதைரியம் அடைந்து திரும்ப எகிப்தின் அடிமைத்தனத்துக்கு செல்ல அனுமதி கேட்டார்கள். போராடுவதற்கு பதிலாக நல்ல முறையில் சரணடைவதை விரும்பினார்கள்.

ஆனால் மோசேயின் மூலமாக கர்த்தரின் வார்த்தை, ஜனங்கள் தைரியமாக இருக்க வேண்டும் என்றும், சீக்கிரத்தில் அவர்களது துன்பத்திலிருந்தும் எதிரிகளிடமிருந்தும் யேகோவா தேவன் அவர்களை விடுவிப்பதை காண்பீர்கள் என்றும் அறிவித்தது. இதற்கிடையில் காற்றானது வடக்கிலிருந்து வீச, தண்ணீரானது கொஞ்சம் கொஞ்சமாக தெற்கு பக்கமாக பின்வாங்கியது. மணல் தெரிய அதில் இஸ்ரயேலர்கள் அடுத்த பக்கம் கடந்து சென்றார்கள். பனியால் மூடப்பட்டிருந்த எகிப்தியர்கள் ஒரு வேளை வழக்கமாக தண்ணீரால் மூடப்பட்டிருந்த தரையில் செல்கிறோம் என்பதை அறியாமல் சென்றார்கள்.

எகிப்தியர்கள் ஈரமான மணலை அடைந்தபோது புதிதான சிரமங்களை அனுபவித்தனர். இரதத்தின் சக்கரங்கள் மணலில் அமுங்கினதால் குதிரைகள் மெதுவாக சென்றன, பிறகு சக்கரங்கள் உடைந்ததால் பின்வாங்கின. எகிப்தியர்கள் காரணத்தை புரிந்து கொண்டு சுதாரிக்கும் வரை, அந்த காலத்துக்குரிய உருவ பாஷையில் மேக ஸ்தம்பங்களிலிருந்து தேவன் ஒரு தீய

(கோப) கண்ணுடன் அவர்களை பார்த்தார். ஒருவேளை அங்கே மின்னல்கள் போன்ற வெளிப்பாடுகள் இருந்திருக்கலாம். இஸ்ரயேலர்களை பின்தொடர்ந்து போவதை விட்டு திரும்பி போக தீர்மானித்தார்கள். இதற்கிடையில் காற்றின் திசை மாறி, தெற்கிலிருந்து வீசியது. அவர்கள் தப்பித்துக்கொள்வதற்கு முன்னதாக தண்ணீர் அவர்கள் மேல் வந்தது; அவர்கள் புதைந்து சீக்கிரத்தில் அழிக்கப்பட்டார்கள்.

இந்த பதிவில் விசுவாசத்தை தடுமாறச் செய்யும்படி எதுவுமில்லை. எந்த விசேஷித்த சூறாவளி இல்லாமல், காற்றின் மாற்றத்தினால் டொலேடோ என்ற இடத்தில் ஏரி (Erie) என்ற ஏரியின் தண்ணீர் பதினைந்து அடி வரை வேறுபடுகிறது என்று அமெரிக்க அரசின் அறிக்கைகள் காண்பிக்கின்றன. இஸ்ரயேலர்கள் கடலைக் கடந்த போது இரு பக்கமும் கடலானது சுவர் போல இருந்தது என்ற அறிக்கை நமது விசுவாசத்தை தடுமாறச் செய்திருந்தது. ஆனால் சுவர் என்ற வார்த்தை அதன் பரந்த அர்த்தத்தில் வெறும் அரணை குறிக்கிறது. இதே அர்த்தத்தில் அமெரிக்க தேசமானது ஒரு பக்கம் அட்லாண்டிக் சமுத்திரத்தையும் இன்னொரு பக்கம் பசுபிக் சமுத்திரத்தையும் பாதுகாப்பு சுவராக கொண்டிருக்கிறது என்று நாம் கூறுகிறதற்கு ஒப்பாக இருக்கிறது.

இப்படியாக வேதாகமமானது கொஞ்சம் பொது அறிவுடன் விளக்கப்பட்டால் அது முற்றிலும் அறிவிற்கு ஏற்புடையதாக இருக்கிறது. மேலும் வேதமாணவர்கள் அதன் நியாயத்தன்மையை மாத்திரமல்ல அதன் அறிவுச் செல்வத்தையும் பரத்திலிருந்து ஞானத்தையும் கற்றுக்கொள்ளுகிறார்கள்.

### கர்த்தரின் தூதன்

இரவில் இஸ்ரயேலர்களுக்கு வெளிச்சத்தையும் எகிப்தியர்களுக்கு இருளையும் கொடுத்த மேகஸ்தம்பம் அல்லது மூடுபனியாகவோ இருந்தது. அது கர்த்தருடைய தூதன் என்றோ அல்லது அதில் கர்த்தருடைய தூதன் இருந்தார் என்றோ சொல்லப்படுகிறது. பொதுவாக ஆவியின் ஜீவிகள், மானிட விவகாரங்களில் யேகோவாவினுடைய தூதர்களாக இருக்கிறார்கள். உதாரணத்திற்கு அர்ப்பணம் செய்த அனைத்து தேவனுடைய பிள்ளைகளும் அவருடைய சேனாபதியாக, ஊழியர்களாக, தாசர்களாக இருப்பதாக அப்போஸ்தலர் அறிவிக்கிறார்.

தூதன் என்ற வார்த்தை வேதவாக்கியங்களில் இன்னும் பரந்த அர்த்தத்தில் மானிட விவகாரங்களில் அப்பியாசப்படுத்துகிற தெய்வீக வல்லமையை குறிக்கிறது. பரிசுத்த பவுல் எழுதுகிறதாவது: தேவன் "தம்முடைய தூதர்களை காற்றுகளாகவும் தம்முடைய ஊழியக்காரரை அக்கினிஜுவாலைகளாகவும் செய்கிறார் என்று சொல்லியிருக்கிறது." (எபிரேயர் 1:7) உதாரணத்திற்கு அசீரிய ராஜாவாகிய சனகெரிப்பின் இராணுவத்தை மரணத்தில் அடித்தது போல பார்வோனின் இராணுவம் அடிக்கப்பட்டதாக இந்த பாடம் விவரிக்கிறது.

வேத வாக்கியங்கள் குறிப்பிடுகிற பயன்படுத்தப்பட்ட இராணுவமாக கர்த்தருடைய தூதனே இருந்தாரா அல்லது இயக்கப்பட்ட இராணுவத்துக்கு பொறுப்பேற்று பயன்படுத்தினாரா என்பது முக்கியமில்லை. இரண்டு காரியத்தில் பலன் ஒன்று தான். இயற்கையின் (பஞ்ச) பூதங்கள் மூலமாக நேரடியாகவோ அல்லது இடையிலே ஆவியின் ஜீவிகள் மூலமாகவோ யோகாவாவின் நாமம் மற்றும் வல்லமையில் இயற்கை சக்திகளை கட்டளையிடுவதின் மூலம் யேகோவாவின் வல்லமை சமமாக வெளிப்படுத்தப்படுகிறது.

நிழலான இஸ்ரயேலர்களின் சார்பில், தெய்வீக வல்லமையின் வெளிப்பாடுகள் பற்றிய அநேக மதிப்புமிக்க பாடங்கள் கிறிஸ்தவர்களுக்கு இருக்கின்றன. இதே தேவன் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களை பாவம் மற்றும் சாத்தானின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்க விருப்பம் உள்ளவராகவும் வல்லமையுள்ளவராகவும் இருக்கிறார் என்பதையும் குருதி தோய்ந்த கடல் துன்பத்தின் மூலமாகவும் தப்பிக்கும் வழியை ஏற்படுத்த வல்லமையுள்ளவராகவும் இருக்கிறார்.

தேவனுடைய வார்த்தையை விளக்குவதிலும் கூட அங்கே நமக்கு ஒரு பாடம் இருக்கிறது. நாம் பார்ப்பது போல அது நமக்கு மென்மேலும் தெளிவு, எளிமை மற்றும் அழகுடன் திறக்க ஆரம்பித்து, தேவனிடத்திலும் அவரது வெளிப்படுத்துதலிலும் நமது விசுவாசத்தை அபிவிருத்தி செய்கிறது. இந்த வெளிப்படுத்துதல்கள் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள், இயேசு மற்றும் அவரது அப்போஸ்தலர்கள் மூலமாக கொடுக்கப்பட்டவை.

இஸ்ரயேலர்கள் தங்களது துன்பங்களை அறியும் முன்பே, தேவன் அவர்களது காரியங்களை ஏற்பாடு செய்து, அவர்கள் எல்லா வழிகளிலும் அடைக்கப்படுவார்கள் என்பதை உணர்ந்திருந்ததைப் போல, அதே தேவன் நமது அனைத்து துன்பங்களையும் முன்னறிந்து அதிலிருந்து நம்மை காக்கவும் மீட்கவும் ஏற்பாடு செய்திருக்கிறார். நமது நிலைமையை உணர்ந்து, விசுவாசத்துடன் அவரிடம் நாம் கூக்குரலிட வேண்டும் என்று காத்துக்கொண்டிருக்கிறார். "அவர்கள் கூப்பிடுகிறதற்கு முன்னே நான் மறுஉத்தரவு கொடுப்பேன்." நாம் சில சமயங்களில் மனிதனால் சாத்தியமாகும் அனைத்தையும் செய்து முடிவில் இருப்போம். அதன்பிறகு தான் மோசே சொன்ன இந்த வார்த்தைகளை நாமே நமக்கு பொருத்திபார்க்க வேண்டும். "நீங்கள் நின்று கொண்டு கர்த்தர் உங்களுக்கு செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்."

**R5278**

THE MANNA FROM HEAVEN

## வானத்திலிருந்து மன்னா

யாத்திராகமம் 16 : 2-15

"இயேசு அவர்களை நோக்கி: ஜீவ அப்பம் நானே என்றார்." - யோவான் 6:35

தாங்கள் எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டு, அவர்கள் சார்பாக தெய்வீக வல்லமை செயல்பட்டு, எகிப்தியரின் இராணுவத்தை வீழ்த்தியதை உணர்ந்த இஸ்ரயேலர்கள் மிகவும் சந்தோஷமாக இருந்தனர். அவர்களது மபெரும் தலைவர் மோசே, வல்லமையும் அழகும் மற்றும் உயர்ந்த நிலையிலான ஒரு பாட்டை இயற்றினார். அதை இஸ்ரயேல் புத்திரர் மோசேக்கு பின்பாட்டாக பாடினார்கள். மோசே மற்றும் ஆரோனின் சகோதரியாகிய மிரியாமின் தலைமையில் சகல ஸ்திரீகளும் தம்புருகளோடும் தங்கள் உடலையும் கால்களையும் அசைக்கிற நடனத்தோடும் அவருக்கு பின்னே சென்றார்கள்.

"கர்த்தரைப் (யேகோவாவை) பாடுங்கள்;

அவர் மகிமையாய் வெற்றிச் சிறந்தார்."

பாட்டுப்பாடி தேவனை துதித்தல் என்பது தேவனை ஆராதிக்கும் முறைகளில் மிகவும் பிரயோஜனமான ஆர்வமுள்ள ஒன்றாகும். அவை நமது இருதயத்திலிருந்து வருவதாகவும் உண்மையான மனோபாவத்தை குறிப்பதாகவும் இருந்தால் மட்டுமே தேவனுக்கு

ஏற்புடையதாக இருப்பது நிச்சயம். ஆனால் அநேக கீர்த்தனைகள், அநேக ஜெபங்களைப் போல அவர்களது தலைக்கு மேலே கூட போவதில்லை என்று நாம் பயப்படுகிறோம். உண்மையிலேயே அக்கறையில்லாமல், பக்தியில்லாமல் பாடுதல் சில சமயங்களில் தேவனுடைய நாமத்தை வீணில் வழங்குவதாக இருக்குமோவென்றும் தேவன் தம்மை அவமதித்தாக கோபமடைவரோ என்றும் பயப்படுகிறோம். அப்படியிருந்தால் அதன் பலனானது ஆசீர்வாதத்திற்கு மாறானதாக இருக்கும். அந்த அளவுக்கு தனது பக்தியற்ற நிலையை பாடுபவர் அறிந்து கொண்டிருப்பார். "கர்த்தர் தம்முடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவர்களை தண்டியாமல் விடார்." (யாத்திராகமம் 20:7)

அதற்கு தண்டனையாக அநீதியான அல்லது கொடூரமான வேதனை தற்காலத்திலோ அல்லது எதிர்காலத்திலோ கொடுக்கப்படும் என்று நாங்கள் சொல்லவில்லை. ஆனால் இப்படிப்பட்ட மார்க்கம் பக்தியற்ற இருதயத்தில் கிருபையின் தெய்வீக செய்தியின் ஆதிக்கத்துக்கு குளிர்ச்சியையும் அலட்சியத்தையும் ஏற்படுத்தி எதிர்விளைவை நடப்பிக்கும் என்று நாம் நம்புகிறோம். சகல கிறிஸ்தவர்களும் ஆவியுடனும் புரிந்து கொள்ளுதலோடும் பாடினால், வேறு யாரும் கீர்த்தனைகளை பாடாதிருந்தால், பூமிக்குரிய சத்தங்கள் கர்ணகொடூரமாக இருக்கும். ஆனால் அவைகளின் பரலோக எதிரொலியும் நறுமணமும் தேவனுக்கு மிகவும் ஏற்புடையதாக இருக்கும்.

## கசப்பான தண்ணீர், பின்னர் பாலைவன சோலை

வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை நோக்கி பயணம் ஆரம்பித்தது. நீண்ட பிரயாணத்தில் களைப்படைந்து தாகத்துடன் அவர்கள் செழிப்பான இடத்துக்கு வந்தார்கள். அங்கே தண்ணீர் அதிகமாக இருந்தது. ஆனால் ஐயோ, அது கசப்பாக அல்லது உவர்ப்பாக இருந்தது.! ஏமாற்றம் பெரியதாயிருந்தது. பக்தியான பாட்டுகள் மறக்கப்பட்டன. சிவந்த சமுத்திரத்தின் வழியாக அவர்களை கொண்டு வந்த யேகோவாவின் வல்லமை மறந்து போனது. எகிப்தின் கடின வேலை வாங்குபவர்கள் கூட மறந்து போயின. எகிப்தின் செழிப்பான வயல்கள் மற்றும் அதன் மிகுதியான தண்ணீரிலிருந்து அவர்களை பிரித்து கொண்டு வந்ததற்காக ஜனங்கள் மோசேக்கு எதிராக முறுமுறுத்தார்கள். அவர்கள் எகிப்திலேயே இருந்திருந்தால் அல்லது அங்கே செத்துப் போயிருந்தால் நலமாயிருந்திருக்கும் என்று கூறினார்கள். மோசேயும் ஆரோனும் செழிப்பான தேசத்திலிருந்து வனாந்தரத்திற்கு பசியினாலும் தாகத்தினாலும் சாகும்படி தங்களை கொண்டு வந்தார்கள் என்று கூறினார்கள்.

கர்த்தர் ஒரு குறிப்பிட்ட மரத்தை மோசேக்கு காண்பித்து, அதை தண்ணீரில் போட்டவுடன் தண்ணீர் மதுரமாகவும் சுவை மிகுந்ததாகவும் மாறினது. மோசே அவர்களிடம், நீங்கள் முறுமுறுத்தது எனக்கு விரோதமாக அல்ல, கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுத்தீர்கள். நான் அவரது பிரதிநிதி மாத்திரமே என்று கூறினார். மேலும் அவர்கள் கொஞ்ச காலம் பிரயாணம் பண்ணி, கசப்பான தண்ணீரை விட்டு வெகு தூரம் வந்து செழிப்பான இடமாகிய ஏலிமுக்கு வந்தார்கள். அங்கே இளைப்பாறினார்கள்.

மாம்சீக இஸ்ரயேலரை வழி நடத்தியதில் தேவன் ஒரு விசேஷித்த நோக்கத்தையும் திட்டத்தையும் கொண்டிருந்தார் என்று வேத வாக்கியங்கள் விளக்குகின்றன. அவர்களுக்கு பிரயோஜனமாக இருக்கக் கூடிய பாடங்களை தேவன் போதித்துக் கொண்டிருந்தார். அதை சரியானபடி அவர்கள் ஏற்றுக்கொண்டால் விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதல் மூலம் கானானுக்கு செல்ல அவர்களை தயார்படுத்தும். "உன் தேவனாகிய கர்த்தர் உன்னை சிறுமைப்படுத்தும்படிக்கு தம்முடைய கட்டளைகள் நீ கைக்கொள்வாயோ, கைக்கொள்ளமாட்டாயோ என்று அவர் உன்னை சோதித்து உன் இருதயத்தில் உள்ளதை அறியும்படிக்கு உன்னை இந்த நாற்பது வருஷமாகவும் வனாந்தரத்திலே நடத்திவந்த எல்லா வழியையும் நினைப்பாயாக." (உபாகமம் 8:2)

இந்த பாடம் ஆவிக்குரிய இஸ்ரயேலருக்கு இன்னும் முக்கியமான ஒன்று. மாம்சீக இஸ்ரயேலர்கள் பூமிக்குரிய கானானை அடைய தயாராவதற்கு இருதய அபிவிருத்தியும் விசுவாசமும் தேவைப்பட்டது. அப்படியானால் ஆவிக்குரிய இஸ்ரயேலருக்கு எகிப்தாகிய இந்த உலகம் மற்றும் அதன் பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டு பரம கானானுக்கு செல்லும் பயணத்துக்கு தயாராவதற்கு இன்னும் எவ்வளவு தேவைப்படுகிறது. பல சோதனைக்குரிய அனுபவங்களை "கசப்பான தண்ணீர்களை" விசுவாசத்திற்கும் பொறுமைக்கும் சோதனைகளாக தேவன் ஆவிக்குரிய இஸ்ரயேலருக்கு வரும்படி அனுமதிப்பதில் நாம் ஆச்சரியப்படக்கூடுமா?

இடுக்கமான பாதையில் பயணம் பண்ணும் சோதனையான அனுபவங்களில் தேவனுடைய எந்த பரிசுத்தவானுக்கும் கண்ணீர் வரலாம். ஆனால் அவர்களது முறுமுறுத்தல் மன்னிக்கக்கூடியதல்ல. அது மாத்திரமல்ல, ஒவ்வொருவரும் நமது ஆண்டவர் கூறியது போல் சொல்ல வேண்டும். "பிதா எனக்கு கொடுத்த பாத்திரத்தில் நான் பானம் பண்ணாதிருப்பேனோ?" (யோவான் 18:11) மோசேயைப் போல தேவனிடத்தில் சரியான விசுவாசத்துடன் கசப்பான நீருற்றுகளை அடைகிறவர்களுக்கு கர்த்தர் விலையேறப்பெற்ற வாக்குத்தத்தத்தை அறியப்பண்ணுகிறார்.

"நமது வாழ்க்கையின் துன்பங்கள் அதிக கசப்பை தருகிறது."

மாம்சீக இஸ்ரயேலர்கள் கசப்பான தண்ணீர்களிடத்தி -லிருந்து ஏலிமுக்கும் அதன் இளைப்பாறுதலுக்கும் நிழலுக்கும் வழி நடத்தப்பட்டார்கள். அதே போல தேவனுடைய ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் அவர்களது தகுதிக்கு மேலாக சோதிக்கப்படவோ பரீட்சிக்கப்படவோ மாட்டார்கள். ஒவ்வொரு சோதனையிலும் கர்த்தர் அதிலிருந்து தப்பிக்கும்படியான போக்கையும் உண்டாக்குகிறார். தற்கால வாழ்க்கையின் வனாந்திர நிலைமையில் அவர்களது சோதனைக்காக தயார்படுத்தி அவரது பரிசுத்தவான்களின் ஆத்துமாக்களுக்கு அடிக்கடி புத்துயிர் அளிக்க, ஆறுதலையும் இளைப்பாறுதலையும் அளிக்கிறார். (1கொரிந்தியர் 10:11-13)

## "அது என்ன?" – அது மன்னா

இஸ்ரயேலர்கள் தேவனுக்கும் அவரது கருவியும் ஊழியனுமான மோசேக்கும் எதிராக முறுமுறுத்ததற்கு காரணம் அவர்களுக்கு போதுமான அளவு விசுவாசம் இல்லாததே ஆகும். தெய்வீக பராமரிப்பை உண்மையாக விசுவாசித்தவர்கள் எகிப்தின் வாதைகளிலிருந்து காக்கப்பட்டார்கள். மேலும் சிவந்த சமுத்திரத்தை கடக்கப் பண்ணிக்கொண்டு வந்த தெய்வீக கிருபை வனாந்தரத்தில் அவர்களை பட்டினியால் சாகும்படி விடாது என்றும் உறுதியாக கூறலாம். ஆனால் பெரும்பாலானவர்கள் நம்பிக்கை குறைவினால் முறுமுறுத்தார்கள்.

அதே போல இப்பொழுதும் இருக்கிறது. பரிசுத்த பவுல் கூறுவது போல "எல்லாரும் விசுவாசம் உள்ளவர்கள் அல்ல." இதற்காக நாம் அவர்களை குறை கூறவில்லை. சுற்றுப்புற சூழ்நிலைகளும் பாரம்பரிய குணங்களும் விசுவாச குணலட்சணத்தை மிகவும் பாதிக்கக்கூடியதாக இருக்கிறது. தற்கால யுகத்தைப் பொருத்தவரை சிலர் பிறப்பினாலும், ஆரம்பகால பயிற்சி மற்றும் அதிகமான அனுபவங்களினாலும், மற்றவர்களை காட்டிலும்

அதிகமான அனுகூலத்தைப் பெற்றிருக்கிறார்கள். ஏனெனில் தற்கால செய்தி கேட்பதற்கு காதுள்ளவர்களுக்கு மட்டுமே என்று தேவன் நியமனம் செய்திருக்கிறார். "கேட்கிறதற்கு காதுள்ளவன் கேட்கக்கடவன்." தேவனுடைய செய்தியைக் கேட்க காதுள்ளவர்களும், விசுவாசத்தை அப்பியாசப்படுத்து -கிறவர்களும் மாபெரும் ஆசீர்வாதத்தை பெற்றிருக்கிறார்கள். அதாவது மற்றவர்கள் பெறாத சந்தர்ப்பத்தை இவர்கள் பெற்றிருக்கிறார்கள். இந்த சுவிசேஷ யுகத்தின் கீழ் தங்களது அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதியாக்கும் சந்தர்ப்பத்தை பெற்றிருக்கிறார்கள்.

தேவனுடைய வசனம் வரக்கூடிய ராஜ்யத்தை போதிப்பதினாலும் அதில் தற்காலத்தில் கேட்கிற காதையும் உணருகிற இருதயத்தையும் பெற்றிராதவர்களை விலையேறப்பெற்ற சந்தர்ப்பங்களினால் ஆசீர்வதிப்பதி -னாலும் நாம் தேவனுக்கு நன்றி செலுத்துகிறோம். வருகிற யுகத்தில், ஆயிரம் வருட யுகத்தில் குருடான கண்கள் திறக்கப்படும் என்றும் செவிடான காதுகள் கேட்கும் என்றும் தேவனுடைய வசனம் அறிவிப்பதினால் நாம் தேவனுக்கு நன்றி செலுத்துகிறோம். இயேசுவே உலகத்தில் வந்த எந்த மனுஷனையும் பிரகாசிக்கிற மெய்யான ஒளி என்கிற வேதவாக்கியம் அப்பொழுது நிறைவேறும். (யோவான் 1:9) ஆனால் இந்த யுகத்தில் கேட்கிறதற்கு காது உள்ளவர்களுக்கும் காண்கிற கண்களை உடையவர்களுக்கும் வைக்கப்பட்டுள்ள பரம அழைப்பின் ஆசீர்வாதத்திற்கு ஈடாக ஆயிரம் வருட யுகத்தில் சந்தர்ப்பங்கள் இருக்காது.

இஸ்ரயேலின் முறுமுறுப்புக்கு பதிலளிக்கும் வகையில் தேவன் அதே இரவில் திரளான காடைகளை அனுப்பினார். அவர்கள் எகிப்தின் இறைச்சி பாத்திரத்திற்கு பட்டினியாக இருந்ததால் தேவன் அவர்களுக்கு வனாந்தரத்திலே இறைச்சியை கொடுக்கக்கூடியவராயிருக்கிறார் என்பதை அவர்கள் பார்க்க வேண்டும். அதிசயத்தக்கதாக காடைகள் அளிக்கப்பட்டது சில அஞ்ஞானிகளால் குறை கூறப்பட்டது. ஏனெனில் தரையானது காடைகளால் ஐந்து அடிகள் வரை மூடப்பட்டிருந்தது. காடையானது சூயஸ் வளைகுடாவின் குறுக்கே பறந்து, களைத்து போனதால் தரைக்கு மிக அருகே ஐந்து அடி உயரத்திற்கு கீழே பறந்ததால் அவர்களால் அதிக எண்ணிக்கையில் சுலபமாக பிடிக்க முடிந்தது.

இதைத் தொடர்ந்து அடுத்த நாளில் இஸ்ரயேலர்கள் திரளான அப்பத்தை பெறுவார்கள் என்று தேவன் வாக்குத்தத்தம் பண்ணினார். அடுத்த நாள் காலையில் வெள்ளையான சிறிய வஸ்து, கடுகு விதைக்கும் கொஞ்சம் பெரியதாக (கொத்தமல்லி விதையளவிற்கு) தேனிட்ட பணியாரம் போன்ற ருசியுடையது பூமியெங்கும் மூடியிருந்தது. அதுவே அவர்களுக்கு தினமும் அனுப்பப்பட்ட அப்பம். அது எடுத்து சேகரிக்கப்பட வேண்டும். அது அவர்கள் அனைவருக்கும் நல்ல வேலை வாய்ப்பை கொடுத்தது. அது இல்லாமல் அவர்கள் சந்தோஷமாக இருந்திருக்க முடியாது. அதை சமைக்க வேண்டியிருந்தது. அது ஒவ்வொருவருக்கும் ஒரு குறிப்பிட்ட அளவாக பகிர்ந்து கொடுக்கப்பட்டது.

பெருந்தன்மையைப் பற்றிய ஒரு பாடம் இந்த மன்னாவில் இருந்தது. ஏனெனில் அடுத்த நாளுக்கென்றும் அதிகப்படியாக வைத்திருந்தது கெட்டுப் போய் விட்டது. இஸ்ரயேலர்கள் இப்படிப்பட்ட அப்பத்தை அறிந்ததேயில்லை. அது என்ன என்று கேட்டார்கள். அதுவே அதற்கு பெயராயிற்று. "அது என்ன" அல்லது "அது மன்னா." இந்த மன்னாவை சேகரிப்பதில் ஓய்வு நாள் கூட ஆசரிக்கப்பட்டது. ஓய்வு நாளில் மன்னா பொழியாது. ஆனால் ஓய்வு நாளுக்கு முந்தின நாள் சேர்த்து வைத்த மன்னா ஓய்வு நாளில் கெட்டுப்போகாமல் இருந்தது.

## வானத்திலிருந்து வந்த அப்பம்

வானத்திலிருந்து வந்த மன்னாவை இயேசு தமது சீஷர்களுக்கு ஞாபகப்படுத்தினார். மேலும் அந்த மன்னா, உண்மையான அப்பமாகிய தன்னை அடையாளப் -படுத்தியதாக கூறினார். இஸ்ரயேலர்கள் மன்னா இல்லாதிருந்தால் அழிந்து போயிருப்பார்கள். அதே போல ஆவிக்குரிய இஸ்ரயேலர்களும் பரலோக உணவு இல்லாமல் பிரயாணத்துக்கு தேவையான பலத்தை பெற்றிருக்க மாட்டார்கள். இயேசு சத்தியம் என்ற பெயரை தமக்கே சூட்டிக்கொண்டார். ஆகையால் வானத்திலிருந்து வந்த அப்பத்தை புசிக்கிறவர்கள் சத்தியத்தில் பங்கு பெறுவார்கள். "உம்முடைய சத்தியத்தினாலே அவர்களை பரிசுத்தமாக்கும். உம்முடைய வசனமே சத்தியம்." (யோவான் 17:17) நமது கர்த்தரில் அதிகமாக, அனுதினமும் தவறாமல் பங்கு பெற்றால் மட்டுமே, அவரது புண்ணியமும் அவர் நமக்காக செய்யும் ஏற்பாடுகளும் நம்மை அவரில் பலப்படுத்தி, நமது பிரயாணத்தை விசுவாசத்துடன் விடாமல் தொடரவும், ஆவிக்குரிய கானானுக்குள் நுழையவும் செய்யும்.

ஒவ்வொரு இஸ்ரயேலரும் மன்னாவை தானே சேகரிக்க வேண்டியிருந்தது போல, ஒவ்வொரு கிறிஸ்தவனும் சத்தியத்தை தானே சேகரித்து உபயோகித்து கொள்ள வேண்டும். நாம் நமது பங்கை ஆவிக்குரிய விதத்திலும் மாம்சீக விதத்திலும் நாம் செய்ய வேண்டும். ஆரம்ப வேலைகளாகிய நடுதல், கிளைக்கழித்தல் மற்றும் பயிர் செய்தல் இல்லாமல், பரிசுத்த ஆவியின் கிருபைகள் அதை பூரணப்படுத்த வரும் என்று எதிர்பார்க்க முடியாது. யாரோ ஒருவர் நன்றாக சொன்னார்: "கல்லூரிக்கு போனவர்களெல்லாம் பண்டிதராக முடியாது. ஆலயத்தில் பிரத்யோக இடத்தை பிடித்தவர்கள் எல்லாம் கிறிஸ்தவர்களாகி விட முடியாது." நாம் கர்த்தரிலும் அவரது வல்லமையின் சத்துவத்திலும் பலமுடன் வளரவும் அனுதினமும் அவரில் நாம் புசிக்க வேண்டும். அதாவது அவரது பலியின் புண்ணியத்தை பகுத்து உணர்ந்து உபயோகித்துக்கொள்ள வேண்டும்.

---

ஏழாம் சபையின் தூதனாகிய
சகோ. C.T. **ரசல்** அவர்களின் ரீ-பிரிண்ட்ஸின் தமிழாக்கத்தை வெளியிடுகிறோம்.

வெளியிடுபவர் :
சகோ. R. **செல்வராஜ்,** சென்னை வேதமாணவர் சபை
எண். 22, முதல் தெரு,ராஜீவ் நகர், காலடிப்பேட்டை, திருவொற்றியூர், சென்னை-600 019.
கைபேசி : 97909 00030, மின்னஞ்சல் : mbsa_selvaraj@rediffmail.com
Website : www.thestudiesinthescriptures.com
**FOR PRIVATE CIRCULATION ONLY**